
2 அணா

# முரசொலி

மு.கருணாநிதி

முரசு 1 சென்னை 24—12—54 வெள்ளி ஒலி 39



# குறளோவியம்

யானை ஒன்று தண்ணீர் குடிப்பதற்காக ஆற்றிலே இறங்குகிறது. அப்போது அந்த யானையை முதலையொன்று பிடித்துக் கொள்கிறது. யானை உயிர் தப்பமுடியாமல் தவிக்கிறது. அலறுகிறது. கடைசியாக அந்த யானை, நாராயணா! நாராயணா!! என்று கத்துகிறது. உடனே மகாவிஷ்ணுவான நாராயணன் தோன்றி அந்த யானையை முதலையிடமிருந்து விடுவிக்கிறான். இதைத்தான் புராணிகர் "கஜேந்திர மோட்சம்" என்று கதைப்பார்கள்.

மலைபோன்ற யானையும் நீரில் கால்வைத்துவிட்டால் முதலையிடம் சிக்கிவிட வேண்டியிருக்கிறது என்பதை விளக்கவும், அதுபோலவே தரையிலே பலமில்லாத முதலை, தண்ணீரில் இருந்தால் யானையை இழுக்கக்கூடிய பலம் பெறுவதாகவும் சொல்லப்படுவதை எடுத்துக்காட்டவும் நிகழ்ச்சிச் சித்திரம் தீட்டிய புராணீகக் கற்பனையாளன், இறுதியில் அந்த யானையை அபயக்குரல்எழுப்பவைத்து, அனந்தசயனனையும் அங்கே வரவழைத்து—கஜேந்திர மோட்சம் என்ற கதைக்கு முற்றுப்புள்ளி வைக்கிறான்.

தண்ணீரில் இறங்கி, முதலைவாயில் காலைக்கொடுத்து, பரந்தாமனை அழைத்துப் பரகதி அடைந்த யானை, புராணீகனுடைய யானை!

இதோ, இன்னொரு யானையை நமது வள்ளுவப் பெருந்தகையார் அறிமுகப் படுத்துகிறார், பாருங்கள். வேல் கொண்டு வீரன் வருகிறான். அந்த வீரனை யானை எதிர்க்கிறது. வீரனும், யானையை வெல்லத் தீரமாகப் போரிடுகிறான், தமிழனல்லவா? முதுகு காட்டாத மரபு அல்லவா?

நிமிர்ந்த நெஞ்சோடும், தூக்கிய வேலோடும் அவன் யானைமீது பாயும்போது, யானையும் தந்திரமாக தன் தந்தங்களை நீட்டி, அந்த வீரனின் வயிற்றைக் குத்தி அவனை மேலே தூக்கி விடுகிறது, மரண முகப்பிலே அந்த வேலேந்தி வேதனைக் குரல் எழுப்புகிறான். அதுவும் வீரத்தோடு கலந்து வரும் குரல்தான். வீரனைக் குத்திய வேகத்திலே, அந்த வேழம் வெற்றி நடை போட்டு, ஆவேச மாகவும் ஆத்திரமாகவும்—அங்கு மிங்கும் ஒடுகிறது, அப்படி ஓடும்போது, ஒருபாறைக்குப் பக்கத்திலே தேங்கி நிற்கும் சேறு நிரம்பிய குட்டையிலே காலை வைத்து விடுகிறது. காலை எடுக்க முடியவில்லை. கனமான மிருகம் யானை. அதன் கனம் பூமியை நோக்கி இறங்குகிறதே தவிர மேலெழுந்து கரையேற யானைக்கு உதவி செய்யும் அளவினதாய் இல்லை. யானை தவிக்கிறது, அப்போது ஒரு வேடிக்கை நடக்கிறது- என்ன அந்த வேடிக்கை? ஒருநரி, யானையின் நிலைமையைப் பார்த்து விடுகிறது, இதுதான் சமயமென்று, அந்த நரி, யானையின் மீது பாய்ந்து தன் ஆகாரத்திற்கு வழி தேடுகிறது. யானையின் உடலெங்கும் நரி, தன் பற்களாலும்—நகங்களாலும் பிராண்டி, ரத்தம் குடிக்கிறது, மாமிசமும் தின்கிறது. யானையோ, எதிர்த்திட முடியாமல் ஏங்குகிறது—வேதனை தாங்காமல் துடிக்கிறது, சேற்றிலே மட்டும் அது அகப்படவில்லையானால் அந்த நரி, ஒரே மிதியில் கூழாகிவிடும். இப்போதோ, நரிக்கு ஒரே வேட்டை! நாள் முழுதும் காட்டைச் சுற்றினாலும் இதுபோல உணவு அதற்குக் கிடைக்காது.

வீரனையே சுழற்றும் பலமுள்ள யானை சேற்றிலே சிக்கினால் நரியிடமும் தோல்வியுறும் என்ற கருத்தை வள்ளுவர் அழகான ஓவியமாகத் தீட்டிக் காட்டியுள்ளார் குறள் மூலமாக! புராணீகன் கஜேந்திர மோட்சமென்ற நம்ப முடியாத கற்பனையை யானையின் மூலம் சொன்னான். ஆனால் வள்ளுவரோ, யானையின் வாயிலாக-ஒரு அரசுக்கு வேண்டிய அறிவுரையையே வழங்குகிறார்.

எத்துணை படைபலம் இருந்தாலும்-ஒரு சிறு பலவீனத்தின் காரணமாக, அந்த அரசு, பலமற்ற எதிரிகளால் பறிக்கப்படலாம் என்பதற்காகவே வள்ளுவர்—யானையின் வலிமையையும், அதுசேற்றிலே செல்லாக் காசாகிவிட்ட சேதியையும் - சிறுநரி ஜெயித்த விந்தையையும், குறளோவியம் தீட்டிக்காட்டியிருக்கிறார்.

உலகிலே போற்றப்படும் பெரும் பெரும் மேதைகளும்-வீரர்களுங்கூட, சிறுதவறுகளாலேயே, சிறியவர்களால் வீழ்த்தப் பட்டிருக்கிறார்கள்.

மராட்டியம் தந்த மாவீரன் சிவாஜி, இந்துமதச் சேற்றிலே கால்வைத்ததால் அல்லவா, காகபட்டர் என்னும் ஆரியத்தலைவனுக்கு மண்டியிட்டான்! உலக சரித்திரத்தின் ஜோதிவிளக்குகளான சீசரும், ஆண்டனியும் தங்கள் சாம்ராஜ்யத்தைக் கட்டிக்காக்க முடியாமல் மண்ணாகப் போனதற்குக் காரணம், அழகி கிளியோபாட்ரா தந்த இன்பச் சேற்றில் அகப்பட்டுக் கொண்டதினாலன்றோ!

அவ்வளவு தூரம் போவானேன்—இதோ, நமது இன்பத் திராவிடம் வடநாட்டுச் சேற்றிலே கால்வைத்து விட்டதால் தானே — ஆரியக் குள்ளநரிகளுக்குப் பெரும் வேட்டை கிடைத்திருக்கிறது,

இந்தச் சேற்றிலேயிருந்து நமது தாயகம் தனது காலை எடுத்துத்தீர வேண்டும் என்பதற்காகத்தான் போலும்; அன்றைக்கே வள்ளுவர், யானையின் மூலம் எச்சரிக்கை செய்திருக்கிறார்.

நமக்கு மட்டுமல்ல—நாடாளும் அரசுகள் அனைத்துக்கும் நமது தமிழ்த் தலைவர் தந்த குறளறம்—இதோ தரப்படுகிறது! வேல் கொண்ட வீரனைக் குத்திக் கொன்ற யானை, சேற்றிலே சிக்கினால்—அதை நரிகூட எதிர்த்து அழித்துவிடும்.

"காலாழ் களரின் நரி அடும் கண்ணஞ்சா
வேலாள் முகத்த களிறு"

— கருணா

## மதுரை மாநாடு-அறிக்கை

### வரவேற்புக் குழு உறுப்பினர்களுக்கு

*1955 ஜனவரி 8, 9 தேதிகளில் நடைபெறும் மதுரை மாவட்ட தி. மு. கழக மாநாட்டுக்கு மாவட்டக் கழக உறுப்பினர்கள், வரவேற்புக் குழு உறுப்பினர் கட்டணம் ரூ. 5-ம் உடனடியாக கீழ்க் கண்ட முகவரிக்கு அனுப்பி, தங்களை வரவேற்புக் குழு உறுப்பினராக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டுகிறோம்.*

**எஸ். முத்து**

*மாநாட்டுச் செயலாளர்,*
*4, கட்ராபாளையம், மதுரை.*

**குறிப்பு:—தங்களூர் கிளைக் கழகத்தின் பெயர் பொறித்த கோடியை விரைவில் அனுப்பிவைக்கவும்.**

## முகஸ்துதி—இது ஒரு விதம்!

★

*"தமிழ்நாட்டில் 'இராமாயணத்'தைக் கேலி செய்து நாடகங்கள் நடத்தப்படுகின்றன. 'இன்று மட்டுமல்ல, வடநாட்டவர் தென்னாட்டவரை அடக்கி ஆள்வது; அவர்கள் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக அப்படித்தான் செய்து வந்திருக்கிறார்கள்; இப்போதும் சந்தர்ப்பம் கிடைத்தால், வடவர்கள், தென்னாட்டு மக்களை அடிமை கொள்வர்,' என்று, நாடகம் பார்ப்போருக்கு எடுத்துக் கூறுவதற்காகத் தான் அத்தகு கேலி 'இராமாயண' நாடகங்கள் தமிழ் நாட்டில் நடைபெற்று வருகின்றன."*

*13-12-54-ல் பண்டித நேரு—டில்லியில்.*

# தலையங்கம்

சென்னை [24—12—54] வெள்ளி

## நெருங்கி விட்டோம்!

★

“கன்னடமும், களி தெலுங்கும், கவின் மலையாளமும்......” என்று கன்னடத்திற்கு முதன்மை சொன்னார், மனோன்மணீயம் பாடிய சுந்தரம் பிள்ளை! அந்தக் கன்னட நாட்டிலே, “சென்னைக்கு அப்பாலே உங்கள் கொள்கை சென்றதுண்டோ?” என்று செப்பிடும் பன்றுடை மதியினரின் ‘பவிஷு’ துலங்க, ஜனவரித் திங்கள் 1, 2, தேதிகளில் நாம் கூடப் போகிறோம்; விடுதலை விருத்தம் பாடப் போகிறோம்!

கவிழ்ந்து போன திராவிடரின் வாழ்வை நிமிர்த்து, நிறை மதியாய் வளர்த்து, சீதளம் சிந்த—கர்நாடக பூமியிலே கர்ம வீரர்கள் திரளுகின்றனர். அய்தரும், திப்புவும் வெள்ளை ஏகாதிபத்தியத்துக்கு ஒரு வெடிகுண்டாய், விடுதலைப் பண்பாடும் கருவண்டாய், ஓங்கிய வாளோடு உலவினார்களே; அந்த பெங்களூரிலேதான் இன்னொரு ஏகாதிபத்தியத்தை எதிர்த்திடும் படையும் பாடி வீடு அமைக்கப் போகிறது—புதுப் புலம்களைப் பிடிக்க திட்டங்களை அடுக்கப் போகிறது!

முதல் நாள் சமுதாய சீர்திருத்த மாநாட்டிற்கு கொள்கை வைரம் பாய்ந்திருக்கும் நெஞ்சினராம் காஞ்சி கல்யாண சுந்தரம் தலைமை வகித்திட, நகராட்சி இயலில் நிகரின்றி விளங்கும் நண்பராம் ப. உ. சண்முகம் மாநாட்டை திறந்து வைக்கும் பணியினைச் செய்கிறார்.

இரண்டாவது அரசியல் மாநாடு—பொழுது புலர்ந்ததும் பொதுத் தொண்டினை நினைவில் வைத்து, பழுதுபட்ட நாடதனை பக்குவப் படுத்தும் கருத்தினையே கனவிலும் கொண்டு பணியாற்றும் பொற்புடைத் தோழராம் என். வி. நடராசன் தலைமை தாங்குகிறார். மாற்றாரும் திகைக்கும் வண்ணம் மலைவீழ் அருவியாக புது எண்ணங்களை அள்ளி வீசும் தோழியர் அருண்மொழி அரசியல் மாநாட்டைத் திறந்து வைக்கிறார். இரு நாட்களிலும் நமது பொதுச் செயலாளர் அவர்களும், ஏனைய முன்னணி வீரர்களும் கலந்து கொள்கின்றனர்.

“தமிழகத்தைத் தாண்டி யாருக்கப்பா தெரியும் உங்கள் பிரிவினை கீதம்?” என்று கேலி பேசியோர், “இதோ, பெங்களூரிலே பார்; எங்களது விடுதலை முழக்கம்” என்ற நமது குரல் கேட்டு சிலையாக வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது.

தெக்கணத்தின் ஓரத்திலே திராவிடத்தின் எழுச்சி வீரர்கள்! விந்தியத்தின் விளிம்பிலே விடுதலை விரும்பிகளின் வசீகர அணி வகுப்பு!—உண்மையிலேயே பூரிப்பான செய்திதான் நமக்கு!

கமழ்ந்திடும் பிரிவினை மணம் கர்நாடகத்தையும் கவர்ந்து விட்டது. திராவிடரிடையே சூழ்ந்திருந்த பேத உணர்ச்சிகள் வேகமாக மறைகின்றன.

ஆமாம்; கன்னட மக்களின் இதயத்தை, இன்னமுதாம் நமது இன அரசுக் கொள்கை நெருங்கி விட்டது! பல்லிளிக்கும் பகையாம் டெல்லியின் மேன்னியைப் பிடிக்க இதோ நாம் நெருங்கி விட்டோம்!

## கறை துடைப்பீர்!

நாடகம் உயர் எண்ணங்கள் பூத்திடும் தடாகம்-என்று முதன் முதலாக இந்த நாட்டிற்கு உணர்த்தியவர்கள், நாம் தான்—நாம் சார்ந்திருக்கும் அறிவியக்கம்தான்! காட்சி வடிவிலே காவியங்களைக் காட்டி இன எழுச்சிக்கு அடிகோல முடியும் என்பதைச் சாதித்துக் காட்டினோம். ஜாதிக் கொடுமைகள்—மக்கட் தொகையிலே பாதிக்கும் குறைவாய் இருக்கும் குள்ளநரி இனம் புரியும் கொடுமைகள்—இவையெல்லாம் மெள்ள மெள்ள ஒழிய நாம் நடத்திக் காட்டிய நாடகங்கள் பெரிதும் துணை புரிந்திருக்கின்றன. அணை உடைத்துக் கிளம்பும் காட்டாறுபோல் இன உணர்ச்சி வெள்ளம் இந்த நாட்டில் நிறைந்திருப்பதற்கு நம்முடைய நாடக, இலக்கியத் துறை சேவைகள்கூட ஒரு காரணமாக அமைகிறது.

அந்த அற்புதமான பிரச்சாரக் கருவிகளாம் இலக்கியங்களுக்கும் நாடகங்களுக்கும்தான் எவ்வளவு தடைகள்! அதிகாரம் வகிப்போர் நம்பாதையிலே வாரி இறைத்த இடுக்கண்களை யெல்லாம் பொருட்படுத்தாது இது நாள் வரை இலட்சியப் பாதையிலே நாம் பீடு நடை போட்டபடி இருக்கிறோம். காடு ஒழிக்கும் தீ போல அடக்குமுறை பாணங்கள் நம்மைத் தாக்கிய போதும் நாம் கலங்கியதில்லை.

ஆரியமாயைக்குத் தடை விதித்தனர். அடுக்களை முதல், ஐந்தடுக்கு மாளிகைவரை மக்கள் கூடுமிட மெல்லாம் ‘ஆரியமாயை’ படிக்கப் பட்டது; அரசினரின் ஆணவம் இடித்துத் தள்ளப் பட்டது!

புரட்சிக் கவிஞர் இயற்றிய, ‘இரணியன்’ நாடகமும் அப்படித்தான்! கோப்பளிக்கும் எண்ணெயில் தூக்கி எறிந்தபோதும் அந்த ‘இணையற்ற வீரனின்’ புகழ் பாடாமலிருக்க மாட்டோம் என்று எக்காளமிட்டனர், நமது பாசறை வீரர்கள். முடிவில் ‘இரணியனைத்’ தடை செய்த அந்த முயற்சியிலும் அரசாங்கத்திற்குத் தோல்விதான்! இதே போலத்தான் ஏனைய நாடகங்களும்! ‘போர்வாள்’ ‘தூக்குமேடை’ போன்றவைகள் சட்டமன்றம் ஏறி தப்பிப் பிழைத்து இப்போது நாட்டிலே நடமாடுகின்றன.

முகத்திலே பவுடர் பூசி, முடை நாற்றம் வீசும் பழைமைக் கருத்துக்களைத் துடைக்கும் திராவிட இயக்கத்தின் முயற்சி சென்ற கிழமை மீண்டுமோரு தடைக்கல்லைத் தாண்ட வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ‘இராமாயண’ நாடகத்தை நடத்த இருந்த காரணத்திற்காக சென்ற கிழமை தோழர் நடிகவேள் எம். ஆர். ராதா அவர்கள் கைது செய்யப் பட்டிருக்கிறார். நாடகத் தடைச் சட்டமாம் அந்த வெறிநாயைக் கட்டவிழ்த்து விடுமுன்பே கி. பு கோ 151—வது பிரிவைக் காட்டி திருச்சியிலே தோழர் ராதாவை அரசினர் சிறை வைத்து விட்டனர்!

சென்ற ஜூலை—15 போராட்டத்தின் போது, அலை அலையாய் சிறை புகுந்த கழகக் காளையருக்கு இடமளிக்கு முகத்தான், கேடிகளை விடுதலை செய்தாரே ஆச்சாரியார்; அதைப் போலத்தான் கேவலம் ரௌடிகளுக்குப் பயந்துகொண்டு ராதா நாடகத்தைத் தடைசெய்த தற்போதைய அரசினரின் போக்கும் அமைந்திருக்கிறது. இந்த போக்கு காரணமாக சென்னை மாநில அரசியலில் காகபட்டர் இனத்தவரின் செல்வாக்கு மீண்டும் காலூன்று வதாகவே நாம் நினைக்க வேண்டியிருக்கிறது.

உயர்நீதி மன்றத்திலே, உதவாக்கரை சட்டமாம் (புதுமை) நாடகத் தடைச் சட்டத்தை உருத்தெரியாமல் ஆக்கிவிடும் திராணி நமக்கு இருந்த போதும்கூட; ‘இராமாயண’ நாடகத்தைச் சுட்டிக் காட்டி தோழர் இராதாவைச் சிறை வைத்ததை, காமராஜர் ஆட்சிக்கு ஏற்பட்ட கறையாகவே நாட்டினர் எண்ணுகின்றனர். அக்கிரகாரத்தின் நிகழலாம் சுப்பிரமணியத்தின் சூழ்ச்சி இந்த கறை ஏற்படுவதற்குக் காரணமாயிருந்த போதும்கூட, காமராஜர் விரைவில் நிலைமை உணரவேண்டும்; தக்கது செய்ய முன்வர வேண்டும்.

## பொங்கல் மலரில்..

★

**அரும்பு**— பிறைவானப் பகுதியில் கருணாநிதி எழுதும் உணர்ச்சி மிகுந்த கதை.

**மறத்தி** — புறநானூற்றுப் பாடல் ஒன்றுக்கு தீட்டப்படும் எழுச்சி ஏடு—இதையும் கருணாநிதியே எழுதுகிறார் —
சித்திர விளக்கங்களோடு சீர்பெற்றுத் திகழும் அற்புதப் படைப்பு.

**பரதாயணம்**— கைகேயி எழுப்பும் உரிமைப் போராட்டத்தை கனல் சுக்கும் நடையிலே தரும் உரைநடைச் சிறுகாவியம். நாடக உருவில்! இதுவும் கருணாநிதி எழுதுவதுதான்!


## இயற்கையின் ரசிகன்!

★

கிராமத்தின் இயற்கை காட்சிகளை ரசித்த பிரயாணி ஒருவர் காரை விட்டு கீழே இறங்கினார். ஒரு குடியானவனை அழைத்து, ‘இயற்கையின் அற்புதமே அற்புதம்! நீ இந்த காடுகளில் சுற்றுவாயா? மெல்லிய காற்றை சுகிப்பாயா?’ என்று கேட்டார். “வேறு வேலை இல்லையா, எனக்கு? நீ சொல்லுகிறபடி யெல்லாம் என் நாய்தான் தினமும் அலைகிறது!”

—காரனட்

# கடைசிக் கட்டம்




..கருணாநிதி..

“கனம் நீதிபதி அவர்களே! கூண்டிலே நிறுத்தப்பட்டிருக்கும் நான் கொலைகாரன் என்பது குற்றச்சாட்டு! நானும் அதை ஒத்துக் கொள்ளத்தான் போகிறேன். அதற்கான தண்டனையையும் ஏற்கத் தயாராகவே இங்கு நிற்கிறேன். ஏற்க மறுத்தால்தான் என்ன; நீங்கள் எங்கே விடப் போகிறீர்கள்? என் கழுத்தை இறுக்குவதற்காக தூக்குக் கயிறும், மூச்சடங்கிய என் உடலை மூடிக் கொள்வதற்காக, சிறைச்சாலைக்குப் பக்கத்திலே ஒரு சிறு குழியும் தயாராக இருக்கும் என்பதை நான் அறியாமலில்லை. கொலைகாரன்-அதுவும் ஆசைநாயகியைக் கொலைசெய்தவன்-சொந்தக் கணவனை ஏமாற்றிவிட்டு, உள்ளத்திலேயே கள்ளக் காதலுக்கு இடங்கொடுத்த — பிரியமுள்ள பெண்ணொருத்தியைப் பிணமாக்கியவன் — என்றெல்லாம் ஊர் என்னை சபிக்கும் — உற்றார் உறவினர் தூற்றுவர்—மண்மூடி மடிந்துவிடும் என் உடல் அவர்கள் கண்களுக்குக் கிடைக்காவிட்டாலும், டாக்டர் பாபு என்கிற என்னுடைய பெயரின் மீது அவர்கள் காரி உமிழுவார்கள் என்பதும் எனக்குத் தெரியும்—என்னுடைய இந்த அற்ப சரித்திரம், மற்றவர்களுக்காவது ஒரு பாடமாக இருக்கட்டும் என்பதற்காக, கொலைக்கான காரணங்களை உங்களிடம் விளக்க விரும்புகிறேன்.

காரணங்களைக் கூறி, விடுதலை பெறலாம் என்ற ஆசை எனக்குக் கிடையாது! ஏனெனில்—நான் கூறும் காரணங்கள் எதுவுமே, என்னை நிரபராதி என்று கூறும் சக்தி படைத்தவை அல்ல! எனது கள்ளக் காதலி மஞ்சுளாவை நான்தான் கொன்றேன்.

வெறியில்சொல்லவில்லைஎன்னை அறியாத நிலையில் கொன்றுவிட்டேன். நான் ஒரு டாக்டர். கோபாலபுரத்திலே குடியிருந்து கொண்டு, டாக்டர் தொழில் நடத்தி வந்தேன். நான் குடியிருந்த வீடு, பெரிய மாடிவீடு-மாடியிலே தான் வைத்தியசாலையும் எனது குடும்பமும்-கீழேயுள்ள வீட்டில்தான் மஞ்சுளா, தனது தந்தையுடன் வசித்து வந்தாள். என் மனைவி கோகிலாவுக்கும், மஞ்சுளாவுக்கும் மிகுந்த நட்பு! அந்த வீட்டுக்கு குடிபோன சில நாட்களுக்குள்ளாகவே இருவரும் இணைபிரியா தோழிகளாகி விட்டனர். என் மனைவி கோகிலா, பத்தினிகளின் பரம்பரையிலே வந்தவள். காலையிலே படுக்கை விட்டெழும் போது, என் கால்களைத் தொட்டுக் கும்பிடாமல் அறையைவிட்டு வெளியேறுவதில்லை. பகலானாலும், இரவானாலும்—எவ்வளவு மணி நேரமானாலும், நான் சாப்பிட்ட பிறகே அவள் சாப்பிடுவாள். என் பெயர் பாபு என்பதற்காக—“பா” என்கிற முதல் எழுத்து வரும் எந்த வார்த்தைகளையும் அவள் உச்சரிக்கவே மாட்டாள். என் மீது அளவு கடந்த அன்பும், மரியாதையும், பக்தியும் கொண்டவள். கொஞ்சம் கர்நாடகமாயிருந்தாலும், கணவனைத் தெய்வமாகக் கொண்ட மனைவியாயிருக்கிறாளே; என்ற எண்ணம், அவள் மீது எனக்கு அளவில்லாத பாசத்தை உண்டாக்கியிருந்தது.

கீழ் வீட்டிலேயிருந்த மஞ்சுளா, திருமணமானவள். அவள் கணவன் டில்லியிலேஇருந்தான். கணவனுக்கும் மஞ்சுளாவுக்கும் ஏதோ சிறு தகராறு ஏற்பட்டு அது பெரிதாக முற்றி, கோபித்துக் கொண்டு, மஞ்சுளா தகப்பன் வீட்டுக்கு வந்திருந்தாள், மஞ்சுளா நல்ல அழகி. நாகரீக நாரீமணி. அவளது நீலக்குறு நயனங்கள் அனைவரையும் வசீகரிக்கும் தன்மை வாய்ந்தவை. நான் அடிக்கடி வெளியிலே சென்றுவிட்டு, வீட்டுக்கு வரும் போது கீழ் வீட்டை கடந்து தான் மாடிக்குப் போகவேண்டும் அத்தகைய சந்தர்ப்பங்கள்—நானும் மஞ்சுளாவும் அடிக்கடி சந்திக்கும் நிலையை ஏற்படுத்தின. “நீ என்னைக் காதலிக் கிறாயா?!” என்று ஒரு பெண்ணிடம் கேட்டா தெரிந்து கொள்ள வேண்டும்! பார்த்தே தெரிந்து கொள்ளலாமே—அதுயும் மஞ்சுளாவின் அந்த விழி அசைவு என் இருதயத்தையே அடியோடு அசைத்து விட்டது! ஒரு நாள் நான் வீட்டுக்கு இரவு ஒன்பது மணிக்குத் திரும்பினேன். கீழ் வீட்டு வாயிற் புரத்தில் மஞ்சுளா உட்கார்ந்திருந்தாள். எம்போதும் கோகிலாவும் மஞ்சுலாவும் அரட்டை அடித்துக் கொண்டிருப்பார்கள். அன்று கோகிலாவைக் காணவில்லை. நான் மஞ்சுளாவிடம் அப்பா இல்லையா என்று கேட்டேன். இல்லை-ஊருக்குப் போயிருக்கிறார் என்று கூறினாள்--கோகிலா கூட துணைக்கு வரவில்லையா என்று கேட்டுக் கொண்டே நின்றேன். “இவ்வளவு நேரம் பேசிக் கொண்டிருந்தாள் – தலைவலிக்கிறது என்று தூங்கப் போய் விட்டாள்” என்று மஞ்சுளா கூச்சத்தோடு பதில் சொன்னாள். நான் மாடியில் போய் பார்த்தேன்—கோகிலா நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தாள். மெதுவாக நடந்து, கீழ் விட்டுத் தாழ்வாரத்துக்கு வந்தேன்—மஞ்சுளா, தெருக் கதவைத் தாள்போட்டு விட்டு, திரும்பியவள் என்னைப் பாத்து திடுக்கிடவில்லை! தலையைக் குனிந்து கொண்டு நின்றாள். அருகே சென்றேன். அவள் அசையவில்லை. தொட்டேன், “கோகிலா தூங்கி விட்டாளா?” என்று கேட்டாள்—“சம்மதம்” என்பதற்கு அறிகுறி இந்தக் கேள்வி!—பிறகு சமயம் கிடைத்த போதெல்லாம், நானும் மஞ்சுளாவும்-காதல் கீதம்பாட ஆரம்பித்தோம் இந்த விஷயம் என் மனைவி கோகிலாவுக்குத் தெரிந்து விட்டது — அவள் என்னிடம் எவ்வளவோ கெஞ்சினாள். மன்றாடினாள் நானோ, மஞ்சுளாவின் மயக்கத்திலே அவள் புலம்பலை லட்சியம் செய்யாமலிருந்தேன். பற்பல அறிவுரைகள் கூறி கோகிலா, என்னைத் தடுத்தாள்.

கோகிலாவுக்கும் மஞ்சுளாவுக்கும் விரோதம் வளர்ந்தது- எனக்கும் மஞ்சுளாவுக்கும் தொடர்பு வளர்ந்தது. கோகிலாவோடு நான் சரியாகவே பேசுவது கிடையாது. சதா சர்வகாலமும் மஞ்சுளாவைப் பற்றிய நினைவுகள் அவளைப் பற்றிய கனவுகள்! அவளுடைய தகப்பனர் எங்களின் சந்திப்புகளுக்கு ஒரு தடையாக இருந்தார். அந்தத் தடையை மீறுவது எங்களுக்கு ஒரு புது இன்பத்தையே அளித்தது, கோகிலா ஒருநாள் என்னிடம் வந்து, தான் தற்கொலை செய்து கொள்ளப் போகிறேன் என்று பயமுறுத்தினள். நான் தாராளமாக செய்துகொள், எனக்கொன்றும் ஆட்சேபணை இல்லை என்று கூறிவிட்டேன். கோகிலாவுக்கு, வீட்டுக் குலதெய்வத்தின் அறையிலே முறையிட்டுக் கதறுவதே வேலையாகப் போய் விட்டது! தெய்வம் விட்டவழியில் நடக்கட்டும் என்று, அதன் காலில் விழுந்து கதறினள்.

ஒரு நாள். திடீரென்று டில்லியிலேயிருந்து மஞ்சுளாவின் கணவன் கோபால் வந்து விட்டான். மஞ்சுளாவை சமாதானப்படுத்தி அழைத்துச் செல்வதற்காக கோபாலின் சென்னை விஜயம் நடைபெற்றது. மஞ்சுளாவின் கோபம் தணியாத காரணத்தால், மாமனரின் யோசனைப்படி, கோபால் அங்கே ஒரு மாத காலம் தங்கவும் முடிவு செய்து விட்டான். நானும், மஞ்சளாவும் இப்போது வெகு கஷ்டப்பட்டு சந்தித்தோம். மஞ்சுளா, டில்லிக்குப் போகக் கூடாது என்று நான் வேண்டினேன். அவளும் என்னைப் போலவே முடிவு செய்திருந்தாள். மஞ்சுளா டில்லிக்குப் போய்விடுவாள், பிறகு தன் வாழ்வில் நிம்மதி ஏற்படும் என்று எண்ணியிருந்த கோகிலாவுக்கு — மஞ்சுளா டில்லிக்குப் போகப் போவதில்லை — என்ற செய்தி இடியாக விழுந்தது! கோபாலோ, எப்படியும் மனைவியை சமாதானப் படுத்தி விடலாம் என்ற தைரியத்தில் தங்கியிருந்தான்.

○ தொடர்ச்சி 10-ம் பக்கம்

# புலி வாழ்ந்த குகை

"சிற்றில் நற்றூண் பற்றி நின்மகன்
யாண்டுள னோவென வினவுதி யென்மகன்
யாண்டுள னாயினு மறியே னோரும்
புலிசேர்ந்து போகிய கல்லளை போல
ஈன்ற வயிறோ இதுவே
தோன்றுவன் மாதோ போர்க்களத்தானே.
— புறம் —

★ ★ ★

*தென்னாட்டு தமிழச்சி ஒருத்தியை "உன் மகன் எங்கே" என்று வினவ, "மகன் போன இடம் நானறியேன்; ஆனால் அந்த மகனைப் பெற்றெடுத்த புலிக் குகை இது தான்" என்று கூறி தன் வயிற்றைக் காண்பித்த புறநானூற்றுவீரக் காதையின் நிழல் படிந்த கவிதை இதோ, கவிஞர் சுரதா தரும் புதிய மெருகோடு :—*

வண்டினங்கள் பொதுக்கூட்டம் நடத்தும் சோலை
வந்து புது, மலர்கொய்து; நுணுக்காய் போன்ற
கொண்டையிலே அதைச்சூடும் தருணம்; அங்கோர்
கட்டழகன் வரக்கண்டு; அவனை, நீலக்
கண்ணாலே முன்இழுத்து; தன்னை, அன்னோன்
கரத்தாலே இழுக்கவைத்து; அதற்குப் பின்னர்,
அண்டையிலே நின்ற,மர நிழலைப்; டள்ளி
அறையாக்கித் தமிழ்க்காதல் புரிந்த மங்கை !

★ ★ ★

கவிஎழுதும் திறனுடையாள்; வடக்கு நாட்டின்
கருவறுத்த, மறக்குலத்து மங்கை; நல்ல
செவிலித்தாய்; பகைவர்க்கு சிங்கத்தின் வாய் !
சந்தனத்தை, செம்பொன்னை, கடலின் முத்தை,
குவிக்கின்ற தமிழ்நாட்டைச் சுரண்டித் தின்றுக்
கொழுப்பேறிப் போயிருந்த குள்ளர் தம்மை;
அவசியமாய்த் துண்டித்து, உடல் எலும்பை
அக்கக்காய்ப் பிரித்திட்ட, தென்னாட்டுப் பெண் !

★ ★ ★

ஓடுகின்ற ஆற்றருகில்; மலைப்பக் கத்தில்;
ஊருக்கு மையத்தில்; உயர்ந்து நிற்கும்
மாடங்கள்; மாளிகைகள்; மண்ட பங்கள்;
மன்னர்க்கும், மந்திரிக்கும் சொந்தம் ! காற்றில்
ஆடுகின்ற பனைஓலைக் குடிசை; நாட்டில்
அல்லல்படும் ஏழைகட்குச் சொந்தம் ! வெள்ளைத்
தோடணிந்த காவற்பெண் டென்னும் இந்தச்
சுந்தரிக்குச் சிறியதொரு வீடு சொந்தம் !

★ ★ ★

சங்கீதம்; போர்முறைகள் தெரிந்த, இந்தத்
தமிழ்ச்சி, தன்வீட்டில்; பகைவர் ரத்தம்
தங்கியதோர் கொடுவாளை எடுத்துப் பார்த்துச்
சந்தோஷப் படும்போது; பாணர் வீட்டுச்
செங்கமலம் அங்குவந்து; இடது கையால்,
சிற்றில்லின் நற்றூணைப் பற்றி நின்று,
"எங்கேநின் அருமைமகன் ?" என்று கேட்டாள்.
இதற்கந்த வீரத்தாய் கூறு கின்றாள் :

★ ★ ★

"தங்கத்தை; கிளிச்சிறகின் நிறத்தை; வெல்லும்
தளிருள்ள சோலைதனில் இருக்க மாட்டான்.
சங்கத்தில் இருப்பானா என்றால், இந்தச்
சமயத்தில் அங்கிருக்க நியாய மில்லை.
தொங்குகிற ஊஞ்சலுண்டு; மெத்தை உண்டு;
சிலைபோல மனைவியுண்டு; எனினும், யுத்தச்
சங்குகளும்; முரசுகளும்; அழைக்கும் போது;
சல்லாபமா பெரிது வீர னுக்கு ?

★ ★ ★

மேதினியில் புகழ்பெற்ற புலவர் எல்லாம்
வாதமிட, சந்தர்ப்பம் பார்த்தி ருப்பர்,
காதலர்கள், முத்தமிட்டுக் கொள்வ தற்குக்,
கொம்பு நிலா இரவுவரக் காத்தி ருப்பர்.
மோதுகிற புதுவெள்ளம் வந்து விட்டால்,
உழவரெலாம் எங்கிருப்பர் ? வயலில் அன்றோ ?
அதேபோல், என்மைந்தன், போர்க் களத்தில்
ஈடுபட்டுச் சண்டையிட்டுக் கொண்டி ருப்பான்.

ஒருபக்கம், வெறியோடு, யானைக் கூட்டம்,
வீரர்களைத் தன்காலி னால் நசுக்கித்
தரைமீது ஒட்டிவைக்கும், வாளும், வேலும்,
தயங்காது கொலைசெய்ய ஆரம் பிக்கும்
கரும்பின்இலைக் கூட்டத்தில், காற்ற டித்தால்;
கட்டாயம் சிலஇலைகள் ஒதுங்கும்; சாயும்.
நரம்புஉடல் நடுங்க,சிலர், தம்மைக் கொல்ல
நாடிவரும் வாள்கண்டு, அதுபோல் ஆவர் !

★ ★ ★

துதிக்கையும், சிறுவாலும், நான்கு காலும்,
துண்டாகி; மண்மீது மலைபோல் வீழும்
மதயானை; சுத்தியலைப் போல் இருக்கும்.
மாவீரன் கொலைவாளி னால் கழுத்துச்
சதையோடு, வெட்டுண்ட தலைகள், ரத்தச்
சொம்பு,பல சாய்வதுபோல் சாயும் ! போரின்
புதுமரணக் கணக்குதனை, அம்பு பார்க்கும் !
பிணம்இழுக்கும் வேலைதனை, நரியே செய்யும் !

★ ★ ★

இந்நேரம் என்மைந்தன் போர்வாள் மீது;
எதிர்ப்போரின் வாள்மோதும்; விலகும்; மீண்டும்
வந் துவந்து முகத்தருகில் மின்னும். எந்தன்
மாணிக்கம், அதற்கெல்லாம் அஞ்ச மாட்டான்,
செந்தமிழன், வெற்றியோடு வருவான். அன்றி
செத்தாலும், மார்பில்தான் புண் இருக்கும்.
அந்தப்புண் மீதுஒரு நாக்கு வைத்தால்,
அதுபேசும், அவன்நாக்கு அசைந்தி டாது !

★ ★ ★

சுகங்கண்ட இருஉதடும்,மெளன மாக;
செவ்விழியில் புகைபடிய; வெண்மை யான
நகக்கூட்டம், கருநீல நிறம்போல் மாற;
நெய்கின்ற, கறுப்புநூல் விரிப்பு போல,
சிகைஎன்னும் தலைக்குடுமி அவிழ; உந்தன்
செல்வமகன் செத்துவிட்டான். சாகு மட்டும்,
பகைவாளை, அவன்பார்த்தான். அன்றி, அந்தப்
பகைவாளோ, அவன்முதுகைப் பார்க்க வில்லை !

★ ★ ★

இதுபோல, ஓர்சேதி கேட்க நேர்ந்தால்,
இருவிழியைக் குளமாக்கிக் கொள்ள மாட்டேன்.
புதுக்கீர்த்தி பெற்றுவிட்டான், காவற் பெண்டு
பெற்றெடுத்த மணிப்பிள்ளை; என்று, நாட்டுப்
பொதுமக்கள் பேசுவதைக் கேட்டு, ஈன்ற
பொழுதைவிடப் பூரிப்பேன். வீரன் செத்தால்,
எதற்காக அழவேண்டும்; உலகம் போற்றும்
இறவாத புகழ்வைத்துச் சென்ற போது ?


★ ★ ★

ஆலிலைதான் என்வயிறு; மணம் எனக்கு
ஆகாத பருவத்தில். ஆனால், எந்தன்
வாலிபத்தில், காதலித்து, சுகித்து, வீட்டு
வாழ்க்கையிலே பிள்ளைகுட்டிப் பெற்ற பின்னும்,
ஆலிலைதான் என்வயிறு என்று சொன்னால்.
அவ்வுவமை, என்வரைக்கும் தவறு என்பேன்.
வேலெடுப்போன் என்பிள்ளை. அவனைப் பெற்ற
வயிறு, பெறும் புலியிருந்த மலையின் பொந்து !

★ ★ ★

புலிவாழும் குகைஉண்டே, அதற்கும்; கொன்றைப்
பூவின்நிறம் போலிருக்கும் புலிக்கும்; எந்த
நிலையான உறவுண்டோ, அதனைப் போன்ற
நிலையேதான், எங்களது உறவும் !" என்றாள்
மலைபோல அசையாது நின்றி ருந்த
மங்கையவள் அவ்வீர உரையைக் கேட்டுத்
"தலைசாய்க்கும் கோழைகள்இப் பேச்சைக் கேட்கச்
செவிசாய்க்க வேண்டும்"எனச் சொன்னாள். சென்றாள் !

★ ★ ★






## 19

## வேடதாரியின் கையில்!

அப்பா, நீதிமன்றத்திலே நிறுத்தப் பட்டார். மனைவியைக் கொலை செய்த மாபாவி என்று தெருவார் திட்டித் தீர்த்தார்கள். பாட்டியின் முகத்தை ஊரில் உள்ளோர் பரிதாபமாகப் பார்ப்பது, பாட்டியை உயிரோடு வைத்து சித்ரவதை செய்வது போலிருக்குமாம். அய்யோ பாவம், தள்ளாத காலத்திலே இந்தக் கிழவி, மருமகளேயும் சாகக் கொடுத்து, மகனையும் இழந்து தடுமாடுகிறாளே என்று ஊர் மக்கள் பேசுவது அவர்களுக்கு அழுகையையும் ஆத்திரத்தையும் உண்டாக்குமாம். பத்துவயதுப் பேரன் என்னையும், ஐந்து வயதுப் பேத்தி என் அருமைத் தங்கையையும் பார்த்துப் பார்த்து அழுது கொண்டிருந்த பாட்டி, வழக்கின் முறையையும் ஆவலோடு எதிர்பார்த்தார்கள். எப்படியாவது, தன் செல்வமகனுக்கு தூக்குத் தண்டனை கிடைக்காமல் போய் ஆயுள்தண்டனை கிடைத்தாலும் போதும் என்று சொல்லிச் சொல்லி ஏங்கினார்கள். தான் ஒரு கிழம், பழுத்த பழமாக வீட்டிலே உட்கார்ந்திருக்கும் போது, தன் குடும்பத்தின் சுடர், தனக்கு முன்பாக பிணமாக சாய்வதை பாட்டி எப்படிப் பார்த்துக் கொண்டிருக்க முடியும்? நாங்களோ, அரும்புகள்! எங்களைப் பாதுகாக்கும் பொறுப்பை சுமக்கும் பாட்டியோ, பழுத்துவிட்ட இலை! திடீரென்று தானும் மண்டையைப் போட்டு விட்டால், எங்கள் இருவரையும் யார் காப்பாற்றப் போகிறார்கள்-எங்கள் கதி என்ன—என்று பாட்டி பெருமூச்சு விடாமல் இருக்க முடியுமா?—அப்பாவின் வழக்கில் தீர்ப்புக்கூறும்நாளும்வந்துவிட்டது—எங்கள் இருவரையும் அழைத்துக் கொண்டு, பாட்டி நீதி மன்றத்துக்குப் போனார்கள். அப்பா கூண்டிலே நின்றார். தங்கை தங்கம் அப்பாவிடம் போக வேண்டுமென்று துடித்தது. நான் கண்ணீர் விட்டபடி நின்றேன். பாட்டி சிலையாக இருந்தார்கள்.

அப்பா, எங்களை ஒரு முறை பார்த்தவர், பிறகு எங்கள் பக்கம் திரும்பவேயில்லை. தீர்ப்பு கூறப்பட்டது. அப்பாவுக்கு மரண தண்டனை இல்லை. ஆயுள் தண்டனைதான் தரப்பட்டது—அவரது வாழ்க்கையில் பதினைந்து வருடங்கள் சிறையிலே உருள வேண்டும்—அப்பா, எங்களைப் பார்க்காமலே நீதி மன்றத்திலிருந்து போலீசாருடன் வெளியேறினார்.

வள்ளி சாக வேண்டும், இல்லா விட்டால் நான் சாக வேண்டும்—என்ற வார்த்தைகளும், வள்ளி முதல் தேதி வெட்டப்பட வேண்டும் என்ற வார்த்தைகளும், அப்பாவைக் குற்றவாளியாக்கப் பெரிதும் பயன் பட்டன. சிறையிலே அப்பாவை சந்தித்த போது, பாட்டியிடம் அப்பா, நடந்த விஷயங்களைச் சொல்லிக் கண்ணீர் விட்டாராம், முதல் தேதி வள்ளி வெட்டப்பட வேண்டும் என்று—தான் எழுதி வைத்ததின் பொருளை அப்பா, விக்கி விக்கி அழுதுகொண்டே பாட்டியிடம் கூறினாராம். தேயிலைத் தோட்டத்து வேலையோடு, அப்பா ஒரு கிழங்குத் தோட்டத்தை குத்தகை எடுத்துப் பயிர் செய்தார் என்று முன்பே கூறியிருக்கிறேன் —அந்தத் தோட்டத்தில் முதல் தேதியன்று வள்ளிக் கிழங்குகளை வெட்டி எடுக்க வேண்டும் என்பதைத் தான் அவர் தனது டைரியிலே எழுதிவைத்திருக்கிறார். கொலை செய்யப் போகிற ஒருமனிதன் தான் அகப்பட்டுக் கொள்வது போல, முன் கூட்டி எழுதி வைப்பானு, என்கிற யோசனை கூட இல்லாமல், அந்த எழுத்துக்களையே ஒரு மனிதனின் வாழ்வைப் பாழாக்க உபயோகித்துக் கொண்டார்

கள். வாதத்தின் திறமை வழ
கறிஞனின் சாமர்த்தியம் என்
கிற புகழ்மாலைகளைப் பெறு
தற்காக, ஒரு நிரபராதியின் வா
வில் பதினைந்து வருடங்க
துண்டாக வெட்டப்பட்டன
வள்ளி வெட்டப்பட வேண்
டும், என்ற அந்த வாசக
சர்க்கார் தரப்பு வக்கீலுக்
சாதகமாயிற்று. அதேபோ
என் அப்பாவிடமும் ப
மிருந்து, ஒரு நல்ல வழக்
ஞர் கிடைத்திருந்தால் அ
வார்த்தைகளை அந்த வக்கீ
சாமர்த்தியமாகப் பயன்ப
திக் கொண்டிருந்திருப்பார்.

"வள்ளி வெட்டப்ப
வேண்டும் என்றுதான் எழு
யிருக்கிறது. ஆனால், இ
வள்ளியம்மையோ குத்த
பட்டு செத்திருக்கிறாள்-ஆக
டைரிக் குறிப்புகள் கும
வடிவை குற்றவாளியாக்
சாட்சியாக, இருக்க மு
யாது!" என்பதுபோல அமை
திருக்கும் அந்த வக்கீல்
வாதம். அதனால், அப்பா வி
தலை பெறவும் முடிந்திருக்கு
அப்படி ஒரு வழக்கறிஞ
வைத்து வழக்கு நடத்
வசதி அப்பாவுக்கு இல்
இதுபோல எத்தனையோ
வழக்குகளில், எத்தனையோ
நிரபராதிகளுக்கு என் தாத்
பொன்னும் பொருளும் வா
கொடுத்து, அவர்கள் உயிரை
காப்பாற்றினாராம். இப்போ
அவரது அருமைக்குரிய மக
யாருமற்ற அனாதையாய் ப
னைந்து வருடகாலம் கூ
டிலே கிடக்க வேண்
என்று தீர்ப்பு வழங்கப்ப
விட்டது. அப்பாவை
சிறைக்குச்சிறை மாற்றி
கொண்டே தொல்லைப்படுத்
கொண்டிருந்தார்கள். பாட்
எங்களை படாதபாடுபட்
வளர்த்து வந்தார்கள். ஆண்
கள் உருண்டன. என
சுமார், பதினைந்து வயதிரு
லாம். தங்கையும் பத்துவய
எட்டிப்பிடித்து வளர்ந்
தது. பாட்டி, உடல் நலிவுற்
படுக்கையில் விழுந்தார்க



...ரகு அவர்கள் எழுந்திருக் ...வேயில்லை. சுமார் ஒருமாத ...லம் பாட்டி, இயற்கை ...டு போராடினார்கள்.

...எங்கள் இருவரையும் பாது ...க்க, இன்னும் சிலகாலம் ...யிரோடிருக்க அவர்கள் எவ் ...ளவோ ஆசைப்பட்டார்கள். ...ருடைய கையிலாவது எங் ...் இருவரையும் ஒப்புவித்து ...ட்டு, நிம்மதியாகக் கண்ணை ...டலாம் என்று துடியாய்த் ...டித்தார்கள். பழுத்து ...திர்ந்து, அனுபவத்தின் கீறல் ...் விழுந்த அந்தக் கிழ நெஞ் ...்திலே, எங்களைப்பற்றிய சிந் ...ன அலைகள் கொந்தளித்துக் ...முறி எழுந்தன.

...என்னையும் தங்கையையும் ...ங்கும் கரங்களால் கட்டிப் ...த்துக்கொண்டு பாட்டி கத ... காட்சிகள் இன்னும் என் ...னதை விட்டகலவில்லை. ...லும்புகளாகிவிட்ட, பாட்டி ...ன் கரங்கள் என்மீது படும் ...ாது, எனக்கு எவ்வளவோ ...றுதலாக இருந்தது. அந்தக் ...்தானே, எங்கள் இருவரை ... இத்தனைநாள் சீராட்டிப் ...ராட்டி வளர்த்தகரம்-என்று ...த்துக் கொள்வேன்-தங்கத் ...த் தழுவிக்கொண்டு அழு ...ன்—தங்கமும் கூக்குர ...ும். பாட்டி மரணவஸ்தை ...ல் கஷ்டப்பட்ட அந்த நாட் ...ில் நானும் தங்கமும் சரி ...க சாப்பிட்டதேயில்லை. பல ...் பட்டினி கிடந்திருக்கி ...ும். அடுத்த வீட்டுக்காரர் ...ின் உபசரிப்புகள் எங்களை ...ிரோடு வாழவைத்தன. ...றுதியாக பாட்டி கண்களை ...டும் அந்த நாளும் வந்துவிட் ...து. அன்று காலையிலே ...ட்டியின் முகத்தில் சாவுக் ...குறிகள் தோன்ற ஆரம்பித்து ...ட்டன. உலகத்தின் இன்ப ...துன்பங்களை அனுபவித்து— ...ழ்வின் இருதுருவங்களையும் ...த்து—வைரம் பாய்ந்து ...ான அந்த குடும்பத்தரு ...டியோடு சாயப்போகும் ...ரம் நெருங்கிக் கொண்டே ...ந்தது. அன்று எங்களிரு ...ரையும் பாட்டி அருகிலேயே ...வத்துக்கொண்டு அணைத்துக் ...ொண்டார்கள். இருபுறத்தி ...ும் நாங்கள் இருவரும் ...ர்ந்து, பாட்டியின் ஸ்பரிச ...ணர்ச்சியால் ஆட்கொள்ளப் ...டு மெய்மறந்து போயிருந் ...ோம். அம்மா, தான் புதை ...ண்ட இடத்தில் மக்கி மடித் ...போய்-உடலை மண்ணோடு ...ண்ணாக்கிவிட்டு, எங்கள் ...ட்டிக்காக பூமியைத் தயார் ...ய்து வைத்திருக்கிறார்கள். ...ப்பா-எந்த சிறையிலே எந்த ...ர்டரிடம் அடி வாங்கு ...றாரோ அல்லது எத்தகைய ...ஷ்டமான வேலையை செய்து ...அதனை அனுபவிக்கிறாரோ— அல்லது இருக்கிறாரோ அவரும் செத்தாரோ தெரியாது. நாங்கள் இருவரும் எங்களுக்கிருந்த ஒரே ஒரு ஆதரவையும் இன்னும் சில மணி நேரங்களில் இழக்கப் போகிறோம் என்ற கலக்கத்தோடு உட்கார்ந்திருக்கிறோம். பாட்டி எதுவும் பேசாமல் எங்களிருவரையும் மாறி மாறிப் பார்ப்பதும், எங்கள் முகங்களைத் தன் முகத்தோடு சாய்த்துக் கொள்வதுமாக இருந்தார்கள். அவர்களது கண்களில் நீர் துளிர்த்தது. என்ன எண்ணினார்களோ—யார் கண்டது? வயதான கிழங்கள், சாகும் காலத்தில் விரும்புவதென்ன? மகன் கொள்ளி வைக்கவேண்டும்; பேரன் பேத்திகள் நெய்விளக்குகள் பிடிக்க வேண்டும் என்று தானே ஆசைப்படுவார்கள். அந்தக் கடைசிக் கடமையைச் செய்ய முடியாமல், குற்றமற்ற தன்மகன் எங்கேயோசிறையில் சித்திரவதைப் படுகிறான் என்பதை பாட்டியால் எப்படித்தான் தாங்கிக் கொள்ள இயலும்—மகனை நினைந்து வழிந்த கண்ணீரோ—அல்லது எங்கள் எதிர்காலத்தைப் பற்றிய ஏக்கமோ — பாட்டியின் இருதயத்தை சல்லடைக் கண்களாகத் துளைத்து விட்டது. அந்த நினைவு எதுவோ தெரியாது; பாட்டி அழுது கொண்டேயிருந்தார்கள். அண்டை அயலார் எல்லாம் வந்து கூடி விட்டார்கள்; பாட்டியை வழி அனுப்பிவைக்க!

திடீரென்று பாட்டி பேச முடியாத நிலை பெற்றார்கள், இனிமேல் பாட்டி, பேச மாட்டார்கள் என்பதை நான் புரிந்து கொண்டேன். ஆனால் தங்கம் புரிந்து கொள்ளாமல், "பாட்டீ! பாட்டீ!" என்று கதறினாள். அவர்கள் பேச முடிய வில்லை என்பதை கை ஜாடையால் உணர்த்தி விட்டு, எங்களை இறுகத் தழுவிக் கொண்டார்கள். "சிறிது நேரத்தில் உயிர் போய்விடும்" என்று பக்கத்து வீட்டுக் காரர்கள் தாராளமாகப் பேசிக் கொண்டார்கள். எங்கள் அருமைப் பாட்டியின் காதுகளில் அந்த வார்த்தை விழுந்ததோ என்னமோ தெரியாது—அவர்கள் எங்களை அழுத்தமாகக் கட்டிக் கொண்டார்கள். எங்கள் முகங்கள், பாட்டியின் முகத்திலே பதிந்து விட்டன.

பாட்டியின் கண்ணீரும் பசலைகளாகிய எங்களின் கண்ணீரும் ஒன்று சேர்ந்தது—வர வர பாட்டியின் அணைப்பு பலமாயிற்று-நாங்களும் அசைவற்று அவர்கள் மீது ஒட்டிக் கொண்டிருந்தோம் — பலமான பிடி சிறிது சிறிதாக தளர்ந்தது. கடைசியில் பாட்டியின் கைகள் எங்கள் மேனியை விட்டு அகன்றன. அய்யோ-பெற்றதாயைவிட அருமையாக வளர்த்த எங்கள் ஆசைப் பாட்டியை சாவு காத்திக் கொண்டுபோய் விட்டது.

"சாஞ்சாடு அம்மா சாஞ்சாடு!" என்று பொக்கைவாய் திறந்து பாடும் அந்தப் பாசமுள்ள பாட்டு இனி அந்தக் குடிசையிலே கேட்காது.

"அன்னிக் கொட்டு பொண்ணே அன்னிக்கொட்டு! அஞ்சாறு காசுக்கு அன்னிக் கொட்டு!" என்று என் தங்கைக்கு விளையாட்டுப் பாட்டுப் பாடிய, அந்த இதழ்கள் திறக்காமல் மூடிவிட்டன. அடுத்த வீட்டுக்காரர்கள், தாங்கள் செய்ய வேண்டிய கடமைகளை அவசரமாக செய்து, பாட்டியை மண்ணுக்கு இரையாக்கி விட்டு அவரவர்கள் வீட்டுக்குப் போய்விட்டார்கள். நாங்கள் தனியாகிவிட்டோம். எங்கள் வீடு இருளாகிவிட்டது. பதினாறு பதினைந்து வயது நிரம்பிய நானும், பத்து வயதுத் தங்கையும் ஒரு குடும்பத்தை நடத்துவதற்கு துரத்தப்பட்டோம். புயலும், இடியும், சீறிக்கிளம்பும் அந்தகார இருட்டிலே, தளிர்களான நாங்கள் இருவரும் பயணம் நடத்துவதென்றால் முடியக்கூடிய காரியமா? யார் எங்களுக்கு நாதி? இந்தக் கேள்வியை நாங்களே கேட்டுக் கொண்டோம். உரக்க உரக்க கேட்டோம். பதில் கிடைக்கவில்லை. பெரும் பணக்கார வீட்டிலே இப்படி இரு இளம் சிட்டுகள் தனியாக விடப்பட்டு, முக்கியஸ்தர் செத்துப்போயிருந்தால், மூலை முடுக்குகளில் உள்ள சொந்தக்காரர்கள் எல்லாம் முந்திக் கொண்டு ஓடிவருவார்கள்—யார் யார், எப்படி எப்படி பங்கு போட்டுக் கொள்ளலாம் என்று திட்டம் போட்டபடி சூழ்ந்துகொள்வார்கள். ஆனால் அனாதைகளான எங்களுக்கு யார் துணை? கேள்விக்குறிகள் பெருகின. வீட்டின் தெருப் புறத்திலே உட்கார்ந்து கொண்டு, பாட்டியின் பிணம் போன திக்கைப் பார்த்துக் கொண்டேயிருந்தோம். அது தான் எங்களின் உடைந்த உள்ளத்திற்கு ஆறுதலாகஇருந்தது. இரக்கப்பட்ட தெருமக்கள் எங்களுக்கு சிறு சிறு உதவிகளைச் செய்தார்கள். அவர்களால் தான் என்ன செய்ய முடியும்! அவர்களும் அன்றாடம் காய்ச்சிகள்தானே!

இப்படி திக்குத் தெரியாமல் விழித்த எங்களுக்கு நல்ல திசை காட்டுவதாகக் கூறிக் கொண்டு, ஒரு மனிதன் வந்து சேர்ந்தான். காஷாய உடையும் "கடவுள் துணை" என்ற மந்திரமும் அவனைச் சாமியார் என்று பறையடித்தன. அந்தச் சாமியார், எங்களது நிலையைப் பார்த்து பரிதாபப்பட்டான். அவர் இலங்கை வாசியல்ல. இந்தியாவிலேயிருந்து வந்தவன் தான். அவன் எங்களை அணுகி, இந்தியாவுக்குத் தன்னுடன் வருமாறும், அங்கே, சுகமாக வாழ எங்கள் இருவருக்கும் வசதிசெய்து தருவதாகவும் கூறினான். தெருமக்களும் சாமியாரைப்பற்றி வானளாவப் புகழ்ந்து, அவரோடு நாங்கள் இந்தியா செல்வது நல்லது என்று அறிவுரை கூறினார்கள். எனக்கும், என்தங்கை தேயிலைக் காடுகளின் ஓரத்திலே வளர்வது பிடிக்கவில்லை. கொடிய விலங்குகள் வாழும் பகுதியில் என்தங்கையும் வாழ்வது என்பது சமாளித்துத் தீர வேண்டிய ஒரு பயங்கரப் பிரச்சினையாகிவிடும் என்று நான் முடிவு கட்டியிருந்தேன். இந்தியாவில் வந்து எப்படியாவது பிழைத்துக் கொள்ளலாம் என்று தைரியங் கொண்டேன். நமக்கு ஒரு நல்லவேலை; தங்கைக்கு ஒருநல்ல கணவன்—இது கிடைத்துவிட்டால் போதும் என்ற ஆசையோடு இலங்கையிலிருந்து புறப்பட்டேன்......அப்போது தெரியாது; சாமியார் எங்களை கெட்ட எண்ணத்தோடு, அழைத்து வருகிறான் என்பது! மருங்கப் பள்ளத்திலேயிருக்கும் புதையலை எடுக்க, ஒரு நரபலி வேண்டுமாம்—அதுவும் சின்னஞ்சிறு பெண்ணாக இருக்க வேண்டுமாம், அந்தப் பெண்ணின் ரத்தத்தை பூமியில் தெளித்தால் தான் புதையல் இருக்கும் இடம் வெடித்துக் கிளம்புமாம். இப்படி ஒரு நம்பிக்கையோடு, என்னையும், என் அன்புத் தங்கையையும் அந்தப் பாதகன் அழைத்துப் போனான் என்பது பிறகு தான் தெரிந்தது.

[ வளரும் ]

●

## மதுரையில்....

மதுரை நகர்

அமெரிக்கர் கல்லூரியில்

7—1—55 அன்று

**அறிஞர் அண்ணா**

அவர்களும்

10—1—55 அன்று

**தோழர் மு. கருணாநிதி**

அவர்களும்

சொற்பொழிவு வாற்றுவார்கள்

# வெளியே சொன்னால் வெட்கம்!

[ சுழல் விளக்கு ]

## கண்ணகியாரே, கண்ணகியாரே!

எப்பட்டியாவது வாரம் ஒரு கூட்டத்திலே அவர் பேசிக் கொண்டு தானிருக்கிறார்; அது சாவு வீடாக இருந்தாலும் சரி, திருக் கல்யாண மண்டபமாக இருந்தாலும் சரி. இவர் ஒரு பெரிய அகில இந்தியத்தலைவர் போலவும், இவர் காங்கிரசை விட்டு விலகினால் பொதுமக்கள் 'ஐயோ காங்கிரஸ் பெரிய ஜன சங்க மாச்சேவேண்டாம்'என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டதைப் போலவும் 'நான் ஏன் காங்கிரசை விட்டு விலகினேன் தெரியுமா' என்ற தலைப்பில் கொஞ்சநாள் 'ஸ்டண்ட்' பண்ணினார்.

கடற்கரைக்கு செல்வதென்றால் வெகுதூரமாகி விட்டதே என்றுஎண்ணியவர்களும்,அங்கு போனால் மணிபர்சில் ஒன்றுமில்லையே என் செய்வது என்று எண்ணியவர்களும் அன்னவரின் சொற் 'போரை' க்கேட்டார்கள். சீசன் முடிந்தது!

தமிழ் நாட்டை சும்மா சொல்லக்கூடாது! நம்பினோரைக் கைவிட்டதே யில்லை! அடுத்த ஒரு சீசன் டிக்கட் கிடைத்தது நமது தமிழருக்கு! ஆம், தேசிகவிநாயகம் பிள்ளை மறைந்தார். அங்கே கூட்டம், இங்கே கூட்டம் என்றார்கள் - எங்கே பார்த்தாலும் நமது தமிழரின் சங்கநாதந் தான்! — கேட்காதா என்ன! அவரே ஏற்பாடு செய்த கூட்டங்கள் தானே!

கவிமணிக்கு ராஜாஜி ஹாலில் அனுதாபக் கூட்டம் போட்டோமே, பேச்சாளர்களே சரியாக வரவில்லையே ஏன், என்ற இன உணர்வு கொஞ்சமாவது வேண்டாமா? சேச்சே ரொம்ப மோசம்! இப்போ 'கல்கி'க்காக வரிந்து கட்டிக் கொண்டு நிற்கிறார்! ராஜாஜி ஹாலில் கூட்டம் வழிந்தோடியதாம்! கவிமணியின் அனுதாபக் கூட்டத்திற்கு பேச்சாளர்களே வரவில்லை - கல்கிக்கு கூட்டம் தாங்கவில்லை! தமிழ் தலைவரின் இதயத்தை இது குத்தவில்லை! அந்தோ சிலம்புச் செல்வமே! கண்ணகித்தாயே! பாராயோ உன் புகழ்பாடியை! இதில்வேறு, கல்கிக்கு இவர்களெல்லாம் சரியாக அனுதாபம் காட்டி எழுதவில்லை என்று நம்மையும் சாடிக் கொள்கிறார். தேள் கொட்டிய வேதனை எங்களுக்கல்லவா தெரியும்—பக்கத்திலிருந்த முன்னாள் 'தமிழ் முரசு'க் காரருக்கு எப்படித் தெரியும். நந்தனார் படம் வந்த காலத்தில் மகாராஜபுரம் விஸ்வநாதய்யரைப் பாராட்டி விட்டு சுந்தராம்பாளை கிண்டல் செய்தது 'கண்ணகி'யாருக்கு பட்டிருக்குமா? ஓமந்தூராரை படிக்காதவர் என்று கேலி செய்தது இவருக்கு உரைத்திருக்குமா? காமராசரை 'பெரிய பதவி சின்ன புத்தி' என்றது இவருக்கு சுட்டுருக்குமா? புதிய கல்வித் திட்டம் ஒழிக்கப் பட்டபோது 'கூவம் நதியிலே கை கழுவினார்கள்' என்று தலைப்பிட்டு எழுதிய கல்கியின் ஏசல் பாணங்களை மான உணர்ச்சி உள்ள எந்தத் தமிழனும் மறந்து விட முடியாதே! கல்கி நல்ல எழுத்தாளர்தான் — நாங்கள் மறுக்கவில்லை! அனுதாபத்திற்காக நாங்கள் செலவு செய்த சில வரிகளும் அவருடைய எழுத்துக்காகத்தானே! அவர் திராவிட சமுதாயத்திற்கு செய்திருக்கிற அதிக்ரமங்களைக் குறித்து எழுதுவதென்றால் அது ஒரு 'டபிள் பொன்னியின் செல்வன்' ஆகிவிடுமே!

அய்யோ பாவம்! பேசுவதற்கு இனத் துரோக மேடைகள்தானா கிடைத்தன! இரவு பகல் உழைப்பு, உருமாறி பணமாவது எப்படி என்பதை கல்கி காரியாலயத்தின் சுவர்களைக் கேட்டால்கூடச் சொல்லுமே! அந்த அடையாற்றக்கரையாரின் ஆரியப்பற்று எங்கே, மறத் தமிழரின் இனத் தூற்றல் எங்கே?

★ ★ ★

## கிழடுதட்டிவிட்டதோ ?

இது நிற்க-பத்திரிகையில் ஒரு தலைப்பைப் பார்த்தேன்-ஒரே அதிர்ச்சி! ஆகா, பெரியதொரு மாறுதல் ஏற்படப் போகிறது காங்கிரஸ் வட்டாரத்தில் என்று நினைத்தேன்—'காங்கிரஸ் தேர்தல் சின்னத்தில் மாறுதல்' என்று தலைப்பிட்டு எல்லா செய்தித்தாள்களிலும்ஒருசெய்தி பிரசுரமாகியிருந்தது. என்னடா என்று கடைசியில் பார்த்தால், 'நுகத்தடி பூட்டிய காளை என்பதற்குப் பதிலாக, 'நுகத்தடி பூட்டிய எருது' என்று தான் எல்லோரும் சொல்ல வேண்டுமென தேர்தல் கமிஷன் குறிப்பிட்டிருக்கிறது.

இதில்என்ன அவ்வளவுபெரிய மாற்றம் ஏற்பட்டிருக்கிறதோ நமக்குத் தெரியவில்லை. ஆனால் ஒன்று மட்டும் உண்மை. காளை என்பது 'இளமை' என்று கருதி காங்கிரசிற்குத்தான் கிழடு தட்டிவிட்டதே 'எருது' என்றுபொதுப்படையாக சொல்லுவதே சரியென்றுதீர்மானித்து விட்டார்களென்று தான் நினைக்கத் தோன்றுகிறது. ஆட்சியின் நிலைமை—கண்காணிப்பின் தரம் இவைகள் மட்டிலும் மாறுது என்பது ஜனங்களுக்கு நாம் சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

★ ★ ★

## மிஸ்டர், பொருளாதாரத்திற்கு!

காங்கிரசிலே தான் இப்படி 'திடீர் மாற்றம்' என்றால் பொதுவுடமைக் கூடாரத்தில் ஏகப்பட்ட ரகளையாக இருக்கிறது. தலைவர்களுக்குள்ளே மனக்கிலேசம்! பி. ஆர் தாசர்கள் ஒரு பக்கம், ஜீவா பிரியர்கள் இன்னொரு பக்கம்! அத்தனையும் நீறு பூத்த நெருப்புக் கங்குகள். வடநாட்டிலே உள்ள பொதுஉடமைக் கட்சிக் காரர்களெல்லாம், ராமமூர்த்தியாலேதான் தென்னாட்டிலே கம்யூனிஸ்ட் கட்சி இருக்கிறதென்று எண்ணி ராமமூர்த்தியை தலையில் தூக்கி வைத்துக் கொண்டு ஆடுகிறார்களாம்! பொலிட் பீரோ முக்கியஸ்தரில் ஒருவராகக் கருதப்பட்டு விட்டாராம்! ஆனால் தமிழ் நாட்டுக் கம்யூனிஸ்ட் கட்சியின் நிலையை உள்ளூர அறிந்தவர்கள், "தென்னாட்டில் பொதுவுடமைக் கட்சி 'நித்திய கண்டம் பூரண ஆயுசாக' இருப்பதற்குக் காரணமே ஜீவாதான் என்கிறார்கள். இதில் கொஞ்சம் உண்மை இருக்கத்தான் செய்கிறது. அந்த சர்வ(!)ஜனத் தலைவர் ராமமூர்த்தி தமிழ் நாட்டில் தங்குவதே இல்லை! எப்போதாவது வருவார்; அவர்கள் தலைவர் ராஜாஜியைப் பார்பார்—சட்டசபைக்குச் செல்வார்—இஷ்டப்பட்டதைக் கேட்பார்—கேள்வி — அவருடைய சர்வ(!)ஜனத்திற்காவது பிரயோஜனப்படக் கூடியதா என்றே அவர் எண்ணுவது இல்லை. மொத்தத்தில் தமிழ் நாடு அவருக்கு'டிராவலர்ஸ் பங்களா' மாதிரி தான்—இப்படி இருக்கும்போது தமிழ் நாட்டில் பொதுவுடமைக் கட்சி ராமமூர்த்தியால்தான் இருக்கிறதென்றால் யாராவது நம்பமுடியுமா? என்ன?

ஜீவானந்தமாவதுஏதோ பேசுகிறார்—அது இராமாயண காலட்சேபமாக இருந்தால் கூட கவலை இல்லை—எப்படியோ ஒவ்வொரு ஞாயற்றுக் கிழமையாவது ரஷ்யாவையும், ஸ்டாலினையும், மாலெங்கோவையும் ஜனங்கள் முன்னே சொல்லியாக வேண்டும் — இப்படிப் 'பேட்டனை'ச் சேர்ந்தவா ஜீவா—இப்போது புரிந்திருக்கும் கம்யூனிஸ்டுக் கட்சியின் தென்னாட்டு வாழ்வு!

இன்னொரு விஷயம்—'நடிகர்களெல்லாம் இனம், இனம்

★ தொடர்ச்சி 10-ம் பக்கம்

## வரிப்பணம்! வரிப்பணம்!!

★

நாடாள வந்திருக்கும் 'தேசீய திருவாளர்' கள் ஆட்சியில் பாரபக்ஷம்தான் 'சர்வசாதாரணம்' என்று எண்ணினார்கள் எதிர்க் கட்சிக்காரர்கள். ஆனால் 'நான் முடவன் மட்டுமல்ல மூளிக்காதனும்கூட என்று சொல்வதைப் போல காங்கிரஸ் சர்க்காரின் நிர்வாகத் துறையின் ஊழல்களும் வெளியாகி வருகின்றன. ரூ 9000 என்று குறிக்கப் பட்ட லாரிகள் ரூ 5500 வீதம் தினமணி கொயாங்காவுக்கு விற்கப்பட்டதை எதிர்க் கட்சிக்காரர்களெல்லாம் 'நுனிப்புல்' மேய்ந்து கை விட்டு விட்டார்கள். கொயாங்காவின் 'தனித் தொகை' யாருக்குக் கொடுத்து வைத்திருந்ததோ! மொத்தத்தில் அரசாங்கத்திற்கு ரூ 14000 நஷ்டம்! வாழ்க கதர் குல்லாய்! வளர்க கதர் ஜிப்பா!!

சர்க்காருக்கு நட்டம் அதாவது-பொதுமக்களின் வரிப்பணத்தில் பாழானது ரூ 14000. மட்டுமல்ல. இந்திய அரசியலாரின் தொழில் துறை உதவி நிதிக் குழுவின் இந்த ஆண்டுக்கணக்கு தணிக்கை அறிக்கை மற்றொரு பெரிய பித்தலாட்டத்தை வெளியாக்கியிருக்கிறது. இத் துறையின் அதிகாரி தன் மனம் போனபடிபணத்தை அள்ளி வீசியிருக்கிறார் என்பதையும், தக்க பொருளாதார அடிப்படையில் நிறுவப்படாத தொழில் நிலையங்களுக்கு கடன் கொடுத்திருக்கிறார் என்பதையும் அந்த அறிக்கை புள்ளி விவரத்தோடு சுட்டிக் காட்டியிருக்கிறது. சர்க்காரால் சிபாரிசு செய்யப்பட்ட மனுக்கள் நிராகரிக்கப்பட்டிருக்கின்றன. சென்ற ஆண்டு மட்டும் அந்தக் குழுவின் அலுவலகச் செலவு ரூ. 60801 அதிகரித்திருக்கிறதாம். இதுவரை அந்த அலுவலகத்திலிருந்து கொடுக்கப் பட்ட தொகையில் நிலுவை நிற்பது 1350000 ரூபாயாம்! தவணையாகச் செலுத்தும் முதலீட்டுப்பணத்தில் நிலுவை நிற்பது ரூ. 29 லட்சமாம்!

செல்வத்தின்வடிவெடுத்த அந்த வியர்வைத் துளிகள் வீண் விரயமாக்கப்பட்டிருக்கிறது-அனைத்தும் காங்கிரஸ் கண்டெடுத்த புதையல்ல; வரிப்பணம்! வரிப் பணம்!!




# திருந்திய தங்கை

## சிங்கத் தம்பிகளே! தங்கத் தங்கைகளே!

பொங்கல் வருகிறது. தமிழர்களின் ஒரே திருவிழா நெருங்கி விட்டது. உங்களுக்கெல்லாம் கொள்ளை மகிழ்ச்சியை— கொண்டாட்டத்தை —குதூகலத்தை அள்ளிக் கொண்டு வருகிறது. பொங்கல் தினத்தன்று உங்களுக்கு நல்ல நல்ல பரிசுகள் வரும். அவைகளுக்கு மத்தியில் பிறைவானமும் ஒரு பரிசு தரப் போகிறது. "என்ன, என்ன?" என்று துடிக்கும் உங்கள் மனதுக்கு இதோ, இனிக்கும் பதில்! அந்தப் பரிசுதான் நமது ஆசிரியர் மு. கருணாநிதி அவர்கள் உங்களுக்குத் தரும், கற்கண்டுக் கதை! ஆசையுடன் பாசமுடன் அளிக்கும் பொங்கல் பரிசு! அரும்பு! கரும்பைவிட இனிக்கப் போகும் — பொங்கலைவிட சுவைக்கப் போகும் அந்த அற்புதக் கதை உங்களுக்கு பொங்கல் பரிசுதானே!

பணமிருந்தும் நல்ல குண மில்லாத ஒரு தங்கை, திருந்திவிட்ட கதை இவ்வாரம் வருகிறது. சென்னைத் தங்கை நித்திலக்குமரி எழுதிய அந்தக் கதை கீழே; படியுங்கள்:

ஃ ஃ ஃ

இரவு மணி பத்தடித்து விட்டது. 'சோ' வென்று ஓரே மழை. மழையாயிருந்தால் என்ன-புயலாக இருந்தால்தான் என்ன? பரீட்சை ஓடிப் போகுமா? மறு நாள் ராணிக்குப் பரிட்சை. ஆகவே அவள் படித்துக் கொண்டிருந்தாள்.

திடீரென்று மழை அதிகமானது. அவளுக்குக் குளிரும் அதிகமானது. உடல் வெடவெடத்தது. இத்தனைக்கும் அவள் உடலின்மீது கம்பளிப் போர்வை இருக்கத்தான் செய்தது. ஆனாலும் குளிர் ஓயவில்லை. அவள் இடத்தை விட்டு எழுந்தாள். திறந்து கிடந்த ஜன்னல் கதவுகளை மூடலாம் என்று எண்ணினாள். ஜன்னலிடம் சென்றாள். மறுகணம் திடுக்கிட்டு நின்று விட்டாள். ஏன் தெரியுமா? ஜன்னல் ஓரமாக வீட்டுத் திண்ணையில் இரண்டு, மூன்று உருவங்கள் நின்று கொண்டிருந்தன. அவள் கூர்ந்து கவனித்தாள். திகைப்பு கோபமாக மாறிவிட்டது.

"யாரது, அங்கே?" என்று கத்தினாள்.

அந்த மூவரும் திடுக்கிட்டார்கள். திரும்பினார்கள். ராணியைப் பார்த்தார்கள். அந்தப் பார்வையில் ஒரே ஏக்கம்; துக்கம்! "பாப்பா! மழைக்கு சற்று ஒதுங்கிக் கொள்கிறோம்; வேறு ஒன்றுமில்லை" என்றாள் அந்த மூவரில் ஒருவள்—ஒரு சின்னப் பெண்.

"மழையாயிருந்தா யாருக்கென்ன? போங்கள், வெளியே!" என்று கத்தினாள் ராணி.

அந்த மூவரும் நடுங்கியே விட்டார்கள். "அப்படிச் சொல்லாதே பாப்பா! எங்களுக்கு இருந்தது ஒரே ஓட்டைக் குடிசை. அந்தக் குடிசையும் இப்போ ஆன கதியை...அதோ பாரு......" என்றாள் அந்தச் சின்னப் பெண். தூரத்தில் கையைக் காட்டினாள். அங்கே... அந்த ஏழைகளின் குடிசை 'தெப்பம்' மிதப்பது போல— மழை நீரில் மூழ்கிக் கொண்டிருந்தது.

அதைப்பார்த்தபிறகும்ராணியின் மனம் இளகவில்லை. "குடிசை அழிந்தால் எனக்கென்ன? இது ஒன்றும் சத்திரமில்லை. மரியாதையாக வெளியே போங்கள்" என்று கத்தினாள்.

அந்த மூவரும் ராணியின் முகத்தை ஒரு முறை ஏறிட்டுப் பார்த்தார்கள். "ம்...இறங்குங்கள்..."-ராணி மீண்டும் உறுமினாள். அவர்கள் கீழே இறங்கினார்கள். நடந்தார்கள். கொட்டும் மழையில் அவர்கள் நனைந்து கொண்டு ஓடினார்கள், வேறு இடம் தேடி. ராணியோ "கழுதைகள்! கொஞ்சம் இடம் கொடுத்தால் எதையாவது சுருட்டிக்கொண்டு ஓடுவார்கள்" என்றுமுணமுணத்தாள் 'படா' ரென்று ஜன்னல் கதவுகளை மூடினாள்.

இது நிகழ்ந்து சில நாட்கள் சென்று விட்டன. ஒருநாள்—

அன்று விடுமுறை. சிநேகிதி ஒருவளின் வீட்டுக்குச் சென்று திரும்பி வந்து கொண்டிருந்தாள் ராணி. ஆனால்; வரும் வழியில்- பாதி தூரத்தில்— 'அழையாத விருந்தாளி' யாக மழை வந்துவிட்டது. அதுவும் தனியாக அல்ல; பெருங்காற்றையும், பேரிடிகளையும் துணைக்குஅழைத்துக்கொண்டு. ராணி பயந்தாள். வேகமாக நடந்தாள். ஆனால்...? காற்று அவளை நடக்க விடாமல் தடுத்தது. அவள் தடுமாறினாள். 'கட கட' வென்று அலறிய இடிகள் — "உஸ்...உஸ்" என்று சுழன்று சுழன்று ஆடிக் கொண்டிருந்த பெரிய மரங்கள் — இவையெல்லாம் ராணியை அழவே செய்து விட்டன.

அந்த சமயத்தில் ஒருகுரல் கேட்டது. "பாப்பா..." என்று அழைத்தது.

ராணி சுற்றுமுற்றும் உற்றுப் பார்த்தாள். தூரத்தில் ஒரு குடிசை தெரிந்தது. அதற்குள்ளிருந்து அவளை யாரோ அழைப்பதும் தெரிந்தது. ராணி ஓடினாள். அந்தக் குடிசைக் குள்ளும் நுழைந்து விட்டாள்.

"ஐயோ பாவம்! மழை வரும் என்று தெரிந்தால் வெளியில் கிளம்பலாமா? இப்படி மழையில் நனையலாமா?" என்று பரிவுடன்கேட்டது அதேகுரல். அப்போதுதான் ராணி பேசியவளைப் பார்த்தாள். மறுகணம் தலையைக் குனிந்தாள். ஏன் தெரியுமா? அப்படிப் பேசிய அந்தப் பெண் வேறு யாருமல்ல. கொட்டும் மழையில், ஒதுங்க இடம் தராமல், 'வெளியே போ!' என்று துரத்தினாளே ராணி, அதே பெண் தான்!

ராணிக்கு வெட்கம் பிடுங்கித் தின்றது. எதுவும் பதில் பேசவில்லை. சற்று நேரம் ஓடும் நீரையே வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்தாள்.. மழை கொஞ்சம் நின்றது. உடனே ராணி அந்தக் குடிசையை விட்டு வேகமாக வெளியே வந்தாள். வீட்டை நோக்கி நடந்தாள்.

ஆனால், அவள் மனம் என்னென்னவோ எண்ணியது. அவள் யோசித்தாள். "அந்தப் பெண் எவ்வளவு நல்லவள்! அப்பப்பா! எனக்கும் அவளுக்கும்தான் எவ்வளவு வித்தியாசம்! கொட்டும் மழையில் விரட்டியடித்தேன் நான். ஆனால், அவளோ கூப்பிட்டல்லவா இடம் தருகிறாள்! என்ன காரணம்? என்னிடம் நிறைய பணம் இருக்கிறது. ஆனால் அவளிடம் நல்ல குணம் இருக்கிறது!. இனி நானும் அந்த நல்ல குணத்தையே பெறுவேன்" என்று தனக்குத்தானே முணு முணுத்தாள். வேகமாக நடந்தாள்.

ஃ

"வாழ்க, அந்த ஏழைச் சிறுமி!" என்று சொல்லத் தோன்றுகிறதல்லவா, உங்களுக்கு? அதில் தவறு எதுவும் இல்லை. அந்த நல்ல குணம் எல்லோருக்கும் வேண்டும். அப்போது எல்லோருக்குமே அந்த வாழ்த்தும் கிடைக்கும்.

## சிறிய வயதிலே

'அவனுக்கு வயதென்னவோ ஒன்பதுதான் இருக்கும்-பள்ளிச் சிறுவன்- ஆனால் ரோசக்காரன்.

"வீட்டில் அம்மாவின் கெடுபிடி- அப்பாவின் கோபம்—பள்ளிக்குப் போனாலோ அங்கு ஆசிரியரின் ஒழியாத தொல்லை; ஓயாத அடி; உதை! இதை எல்லாம் என்னைப் போன்ற சின்னத் தம்பிகள் எப்படி சகிப்பது? சே! ...சே.... என்ன பெரிய மனிதர்கள் இவர்கள்!." இப்படி நினைத்தான் அவன்.

ஒருநாள் அவனே அடி வாங்கி விட்டான். அவ்வளவுதான்; கோபம்பொத்துக் கொண்டு வந்தது. இந்த 'அநியாய' த்தைத் தடுக்க 'போராட்டம்' தொடங்கி விட்டான்— அதுவும் சாத்விகப் போராட்டம்!

அன்று அவன் பள்ளிச்குச் செல்லவில்லை. நேராக எங்கேயோ சென்றான். எங்கே போகிறோமென்று அவனுக்கே தெரியாது. மலைச் சரிவுகளைக் கடந்தான். பள்ளத்தாக்கைச் சுற்றினான். ஊஹூம் ... ஆத்திரம் அடங்கவேயில்லை; நடப்பதையும் நிறுத்தவில்லை. சுற்றிக் கொண்டே இருந்தான், மூன்று நாட்கள்.

மூன்றாவது நாள் கடைசியில் தங்கள் குழந்தைச் செல்வத்தைக் காணாமல் தவித்துக் கொண்டிருந்த அப்பாவும் அம்மாவும், அவனைக் கண்டு பிடித்து விட்டார்கள். 'இனிமேல் அடிப்பதில்லை; உதைப்பதில்லை' என்ற நிபந்தனையைப் பெற்றுக் கொண்டு வீட்டுக்குத் திரும்பினான்.

அந்த 'வேலை நிறுத்தம்' செய்த ரோசக்கார வீரன் யார் தெரியுமா? அவன் தான் ஏழைகளின் நண்பன்-விடுதலை விரும்பி- இன்றைய சீனக்குடியரசின் தலைவர் மா-சே-துங்!

## பெரிய மனிதர்கள்

## கடைசி.........

○ 4-ம் பக்கத் தொடர்ச்சி

கோபாலுக்கும் எனக்கும் நட்பு ஏற்பட்டது—அவனுக்குத் தெரியாது, எனக்கும் அவன் மனைவிக்கும் நட்பு என்பது! ஒரு மாதம்—இரண்டு மாதம்—மூன்று மாதம்—கோபால் தங்கியிருந்தான் சென்னையிலேயே!-கடைசியாகக் கோபாலும், மஞ்சுளாவும் டில்லிக்குப் போகப் போகிறார்கள் என்ற செய்தி எனக்குக் கிடைத்தது. மஞ்சுளாவிடம் கேட்டேன். அவளும் 'ஆமாம்' என்று தலையசைத்துவிட்டு ஓடிவிட்டாள். அவள் என்னைக் கிண்டல் செய்வதற்காக அப்படிச் சொன்னாள் என்பது எனக்குத் தெரியாது — எனக்கு ஒரே ஆத்திரம் பிறந்துவிட்டது! — மஞ்சுளா, டில்லியிலே சென்று வாழ்வதா? நான் சென்னையில் அவளை நினைத்து ஏங்குவதா? என்று பெருமூச்சு விட்டேன்.

அவளைக் கொன்று, யாருக்கும் பயன் படாமல் செய்து விட வேண்டுமென்று துடித்தேன், அன்று வெளியிலே சென்றிருந்த நான், 'ரிவால்வார்' சகிதம் வீட்டுக்குத் திரும்பினேன், மஞ்சுளாவைக் கொலை செய்து, அவள் டில்லிப் பயணத்தைத் தடுக்க வேண்டுமென்று முடிவு கட்டிக் கொண்டு வீட்டுக்குள் நுழைந்தேன். கீழ் வீட்டில் வேலைக்கார சிறுமி நின்று கொண்டிருந்தாள்-அவளிடம், "கோபால் எங்கே?" என்று கேட்டேன் - "அவர் ஊருக்குப் போய் விட்டாராம்" என்று பதில் கூறி விட்டு அவள் வேகமாகப் போய் விட்டாள்-கீழ்வீட்டில், மஞ்சுளாவைத் தேடினேன் - காணவில்லை! சரி! அவளும் போய் விட்டாள் என்ற ஏமாற்றத் தோடு, மாடிக்குப் போனேன். அங்கே என் மனைவி கோகிலாவைக் காணவில்லை. மேசை மீது ஒரு கடிதம் இருந்தது. பிரித்துப் பார்த்தேன்.

"அன்புள்ள பாபு — உம்மிடமிருந்து விடுதலை பெறுகிறேன். என்னை மன்னிக்க வேண்டுகிறேன். நீங்கள் செய்த தவறுகளுக்காக—நானும் தவறு செய்வதா என்று எண்ணினேன். இது முறையல்ல என்று உலகம் சொல்லும்; அறிவாளிகளும் சொல்லுவார்கள்; ஆனல் உம்மைப் போன்றவர்கள் சீர்திருந்தி நடக்க, என் ஒருத்தியின் முடிவு ஒரு பாடமாக இருக்கட்டும். உமது உள்ளங் கவர்ந்த பொருளை உம்மிடம் விட்டுச் செல்லுகிறேன் — இனி என் வாழ்க்கை கோபாலுடன் டில்லியில் நடைபெறும். நமஸ்காரம்.

உமது மாஜி மனைவி,
கோகிலா.

யார் கோகிலாவா? — என் மனைவி கோகிலாவா? — அவள் கோபாலுடன் போய் விட்டாளா — என்று அலறினேன் என்னையே நான் மறந்தேன் — நிலைதடுமாறி நின்றேன் — அப்போது, என் எதிரே மஞ்சுளா வந்திருக்கிறாள். எனக்கு சரியாகக் கண் தெரியவில்லை-மஞ்சுளா, எனக்குக் கோகிலா போலத் தோன்றினாள். இமைப்பதற்குள் ரிவால்வாரை ஓங்கினேன்—சுட்டேன்—சுட்டேன்—சுட்டுக் கொண்டேயிருந்தேன்!—வெறி அடங்கியது—பிறகுதான் மஞ்சுளாவைக் கொன்று விட்டதாக உணர்ந்தேன். கைது செய்யப் பட்டேன், இப்போது இந்தக் கூண்டிலே நிற்கிறேன்"—

என்று குற்றவாளி, தன்னுடைய உரையை முடித்தான் — நீதிபதி கேட்டார்—"கொலையாளி என்பதை ஒப்புக் கொள்கிறாய் அல்லவா?" என்று!

> இந்த இதழில் இடமின்மையால் 'மூக்காஜி' எழுதும் 'சக்கரவர்த்தியின் திருமகன்' அடுத்த இதழில் இடம் பெறும்.

"ஆமாம்—நான் கொலைகாரன் தான் கொலைகாரன் தான்!" என்று டாக்டர் பாபு முகத்திலே பல முறை அறைந்து கொண்டார். அப்போது அவரது மீசை கீழே விழுந்தது-டாக்டர் பாபு, அந்த மீசையை எடுத்து அவசரமாக ஒட்டிக் கொண்டார். கோர்ட் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்த மக்கள் சிரித்து விட்டனர். வக்கீல்களும் சிரிப்பை அடக்க முடியாமல் தவித்தனர். நீதிபதி, கீழே ஆத்திரத்தோடு இறங்கி வந்து குற்றவாளியைப் பார்த்து, "உனக்கு இப்போதே தண்டனை விதிக்கிறேன்.

" அலட்சிய சுபாவத்தோடு, மீசையைக் கூட சரியாக ஒட்டிக் கொள்ளாமல், ஆயிரக் கணக்கான மக்களுக்கு நேராக, நடிப்பதற்கு வந்து விட்ட நீ இந்த நாடகக் கம்பெனிக்கே தகுதியில்லை! இப்போதே இந்தக் கம்பெனியிலிருந்து உன்னை டிஸ் மிஸ் செய்கிறேன். 'மேக்கப்பை' அழித்து விட்டு வெளியேறு!" என்று அதிகாரத்தோடு கத்தினர்- திரை விழுந்தது - டாக்டர் பாபு வேஷம் போட்ட நடிகர், எவ்வளவு தான் கெஞ்சியும் கூட, அவருக்கு நீதிபதி வேஷம் போட்ட கம்பெனி முதலாளியிடமிருந்து மன்னிப்பு கிடைக்கவில்லை.

●

## திருச்சியில்....

திருச்சி தேவர் மன்றம்
26-12-54
ஞாயிறு காலை 9-மணிக்கு
சிறப்புக் கூட்டம்

**தலைவர்:** திரு. எஸ். வி. லிங்கம்
**பேசுபவர்:**
நாவலர்
இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.
**பொருள் :**
(ஆகும் நெறி எது?
ஆகா நெறி எது?)
**இசை :** நாகூர் அனீபா

நன்கொடை **அணா 4.**

## வெளியே சொன்னல்......

★ 8-ம் பக்கத் தொடர்ச்சி

என்று 'குரூப்' சேர்ந்து கொண்டார்கள்; இவர்களை நம்பக்கம் இழுக்க வேண்டும்" என்ற ஆசை பொருள்முதல்வாதிகளுக்கு பிடித்துக் கொண்டதாம். "மாமண்டலமாம் ரஷ்யாவைக் காண்பிக்கிறோம்— மாலென்கோவிடம் உம்மை அறிமுகப் படுத்தி வருகிறோம் சீனவுக்கு இட்டுச் செல்வோம்" என்று ஒரு சில நடிகர்களுக்கு சபல மூட்டுவதாகக் கேள்வி, ஐயோ, பாவம்! ஒன்று மறியாத அந்த நடிர்களும் ஒப்புதல் தந்து விடுகிற நிலைக்கு இழுத்துவரப் பட்டிருப்பதாகச் சொல்லப் படுகிறது. யாரறிவார் மர்மத்தை! எல்லாம் அந்த மார்க்ஸ் நூலுக்குத்தான் வெளிச்சம்!

★ ★ ★

## ஐரோப்பியக் கசையடி!

டிட்டோ பெருந்தலைவர் தான் - ஐரோப்பிய தேசத்திலிருந்து வந்தவரென்றால் அரசியல் நளினத்திற்கா அவரிடம் பஞ்சமிருக்கும்! பம்பாயிலே அவருக்கு பிரமாத வரவேற்பு! வாணவேடிக்கைகள்! பத்திரிகைகளெல்லாம் பத்தி பத்தியாக எழுதின. வரவேற்பு வைபவம் கண்டு டிட்டோவும் சந்தோஷப்படாமலில்லை, சிரித்தார் - சிங்கார நடை போட்டார்-இளநீர் அருந்தினர் - இது போல் நான் எங்கெனும் கண்டதில்லை என்றார்—அதெல்லாம் உண்மைதான். ஆனல் கடைசியில் ஒரே அடியாய்—வாய் அசையாமல் ஒரு அணு குண்டை போட்டுவிட்டிருக்கிறார்-அயல் நாட்டுத் தூதுவர் சொல்லாததை-அகிலம் புகழும் ஜ. என். லாய் சொல்லாததை டிட்டோ எப்படியோ சொல்லி விட்டார்.

"எனக்காகத்தான் இவ்வளவு அலங்காரம் போலிருக்கிறது. சாதாரண நாட்களில் உங்கள் நாடு மிகமோசமாக இருக்கும் போலிருக்கிறதே" என்பதை சொல்லாமல் சொல்லிவிட்டார் டிட்டோ. டிட்டோ பம்பாயிலிருந்து டெல்லிக்குப் புறப்படும் போது பம்பாய் மேயர் டிட்டோவுக்கு ஒரு ரோஜா மாலையை அணிவித்தாராம்! அதற்கு டிட்டோ என்ன சொன்னர் தெரியுமா? "இந்த மாலை மிக அழகாக இருக்கிறது. இதைக் கொண்டே எல்லோரையும் மயக்கி விடுகிறீர்கள்' என்று சொல்லியிருக்கிறார் - இதற்கு என்ன பொருளாக இருக்க முடியுமென்கிறீர்கள்! யூகோ தலைவரின் இந்த 'கசையடி' எப்படி ரத்தம் கட்டி எப்படி புண்ணாகப் போகிறதோ?

●

## புதிய முகவரி

கவிஞர் சுரதா.
12 படவெட்டி யம்மன்
கோவில் தெரு
சென்னை—1

★ ★ ★

## முகவரி மாற்றம்

எஸ், எஸ். பி, லிங்கம்
82 மெயின் ரோடு
ராஜா அண்ணாமலை நகர்
சென்னை-28


புதிய ஓவியங்கள்! வெளி வந்துவிட்டன!

வே. துரைராசு எழுதிய
**அணைந்த விளக்கு**
அழகிய முவண்ண முகப்புடன் 112-பக்கங்கள்
விலை ரூ. 1-0-0

புலிகேசி எழுதிய
**வரைகோல் வேந்தன்**
[ரஷ்யச் சிறுகதை மன்னன் ஆண்டன் செகாவின் வாழ்க்கை வரலாறு]
விலை 0-8-0

கழிவு 25 சதவிகிதம்-அனுப்பும் செலவு இலவசம்
விபரங்கட்கு
ஔவைப் பதிப்பகம் தெப்பக்குளம் பி. ஓ.
திருச்சி

## கலைத் தோட்டம்

# ரத்தக்கண்ணீர்

படத்தை பாதிக்குமேல் எடுத்து விட்டு அந்தப் படம் வெற்றிகரமாக ஓடுவதற்கு என்ன செய்யலாம் என்ற பிரச்சினையிலே மண்டையை உடைத்துக் கொள்கிற நிலைமை பட உலகில் இன்று சர்வசாதாரணமாக எங்கும் காணப்படுகிறது. அது போன்ற சங்கடத்திலே யிருந்து தப்பி, முதன் முதலிலேயே படத்தின் வெற்றிக்கான சாதனங்களை ஏற்படுத்திக் கொண்ட பெருமை "ரத்தக் கண்ணீர்" படத்திற்கு உண்டு.

தமிழ் நாட்டில் மூலே முடுக்குகளில் எல்லாம் ராதா அவர்களின் நாடகம் நடை பெற்று, நாடக உலகில் ஒரு தனிப்பாதை அமைத்துப் புகழ் பெற்ற, சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக் கொண்ட பெருமை, நேஷனல் பிக்சர் பெருமாள் அவர்களேயே சேரும். விரிந்த வியாபார நோக்கமும், சிறந்த பொது நோக்கமும், சீரிய கொள்கை வளர்ச்சி நோக்கமும் ஒருங்கே அமைந்த ஒரு சில பட உரிமையாளர்களில் பெருமாள், சற்று துணிவு மிக்கவர் என்று கூறலாம்.

ராதாவை வைத்து ஒரு படத்தை முடித்துவிட வேண்டுமென்று அவர் கொண்ட ஆசையும், அதே நேரத்தில், ரத்தக் கண்ணீர் படமாக வரவேண்டுமென்று ராதாவுக்கு ஏற்பட்ட ஆவலும் படத்தின் துவக்க முயற்சிகளுக்குப் பெரிதும் உதவியாய் அமைந்தன. படத்தின் டைரக்ஷன் பொறுப்பை ஆரம்பத்திலேயே கிருஷ்ணன் பஞ்சுவின் கைக்கு மாற்றியதுதான் பெருமாளின் திறமைக்கு மற்றொரு எடுத்துக் காட்டாகும் ஒரு கதை—அதுபக்திக் கதையாக இருந்தாலும் அதை டைரக்ட் செய்பவர்கள் அந்தக் கதையோடு தங்கள் இருதயத்தையும் இணைத்துக் கொள்ளக் கூடியவர்களாயிருக்க வேண்டும். அப்போதுதான் படத்தின் வெற்றி, உறுதியாக அமையும். தோழர்கள் கிருஷ்ணன்-பஞ்சு இருவரும் அறிவியக்கக் கொள்கையிலே உடன்பாடுடைய, முற்போக்கு எண்ணங்கொண்டவர்கள். அந்த எண்ணத்தின் பிரதிபலிப்பை படத்தில் நாம் காணமுடிகிறது. இந்தப்படம், ஒரு சனாதன டைரக்டர் கையில் கிடைத்திருக்குமானால், காட்சிகளில் கடவுளர்களின் திருவுருவங்கள் வராமலிருந்தாலுங்கூட, வராத அளவுக்குப் பெருமாள் பார்த்துக் கொண்டாலுங்கூட, ராதாவின் நடிப்பும், அவர் உச்சரிக்கும் தோழர் தங்கராசுவின் வசனங்களும்—சோபையிழந்து போய்விடும் என்பதை மறுக்க முடியாது. படத்திற்காக எடுத்துக் கொண்ட கதை, மிகச் சிறியது - சாதாரணமானது ! — ஆனால், கதையிலே காணப்படும் சம்பவங்கள் உள்ளத்தைத் தொடக்கூடியவை.

ஒரே ஒரு உதாரணம்; ராதா கண்ணையிழக்கும் காட்சியாகும்! மேல் நாட்டு நடிகர்களுக்கும் அந்தக் காட்சி ஒரு நல்ல சவால்!

இதுபேன்ற உணர்ச்சி மிக்க காட்சிகளாலேயே ஒரு படத்தின் வெற்றிக் கொடியைப் பறக்க விடமுடியும் என்பதற்கு, ரத்தக்கண்ணீர் சிறந்த எடுத்துக் காட்டு. தாலேக் கிழித்து, புண்ணிலே ஒட்டிக்கொள்ளும் பரிதாபம் நிறைந்த அந்த நடிப்பு ராதாவை இயற்கை நடிப்பின் சிகரத்திலே தூக்கி நிறுத்துகிறது எனலாம். மோகன், குஷ்டரோகியாக மாறியபிறகுதான். படத்திற்கு விறுவிறுப்பு வருகிறது. அதுவரையில் படத்தை சோபிதமாக்கும் சக்தி, தோழர் ராதாவின் நடிப்பிலும் இல்லே; முகத்திலும் இல்லே. குஷ்டரோகியாக மாறிய பிறகு, ராதா தன்னே மறந்து நடிக்கிறார். நம்மையும் மெய் மறக்க வைக்கிறார். தாயாரின் இறுதியாத்திரையை காட்சியாக்கியிருப்பது மிகவும்நேர்த்தி. இதில் டைரக்டர்களும், கேமரா சந்தரும் பாராட்டுகளேப் பெறுகிறார்கள்' குஷ்டரோகக் கொடுமையைக்காட்ட, பட்டுப்போன மரத்தில் பூச்சிகள் மொய்த்திருக்கும் காட்சியை அமைத்திருப்பது டைரக்டர்களின் எண்ணத்திற்கு ஒரு நல்ல சான்று.

தோழியர் ஸ்ரீரஞ்சனி அம்மையார், பரவாயில்லே என்கிற அளவுக்கு நடித்திருக்கிறார்கள். தோழியர் எம். என். ராஜம் அம்மையார், புகழேணியில் ஏற வேண்டும் என்ற துடி துடிப்பை தனது நடிப்பின்மூலம் வெளிப்படுத்தியுள்ளார்கள். தோழர் ராஜேந்திரனுக்கு கதைப் போக்கிலே நிறைய சந்தர்ப்பங்கள் கிடைக்கவில்லே. ஆனாலும், தரப்பட்ட பாகத்தை—பாத்திரத்தின் தன்மை குறையாத அளவுக்கு நடித்திருப்பதோடு, மணி மணியாக வசனங்களே உச்சரித்து காட்சிகளேயே சிறப்புள்ள தாக்குகிறார். தாசி காந்தாவை இழித்துப் பேசும்போது கொள்கை வைரம் பாய்ந்த அவரது நெஞ்சின் அடித்தளத்திலேயிருந்து வரும் வார்த்தைகள், இலட்சிய முரசு கொட்டுவது போல் இருக்கின்றன, இந்த இடத்திலே, தோழர் தங்கராசுவின் வசனம், சிறப்பான முறையில் அமைந்திருக்கிறது. நகைச்சுவை பாகங்களே ஏற்றுள்ள தோழர் சந்திரபாபு உட்பட அனேவரும் திறமையை நன்கு காட்டியிருக்கின்றனர். பாடல்கள் உயர்தரம். இசையமைப்பு சிதம்பரம் ஜெயராம் என்றால் அதன் சிறப்பை தனியாக ஏன் கூறவேண்டும்! படத்தின் வெற்றிக்கு திரு. ஜெயராம் அவர்கள் பாடும் இரண்டொரு பாடல்கள் பெரிதும் துணே நிற்கின்றன. நாகரீக மோகன், தாயைத் தூற்றும் கொடியோனுகவும், அதே சமயம் சீர்திருத்தக் கருத்துக்களே வெளியிடுபவனுகவும் சித்தரிக்கப்பட்டிருப்பது, முரண்பாடுடையதாய் அமைந்துவிட்டது. கதையில் வரும் இதுபோன்ற சிறு குறைகளேயெல்லாம், கடைசிக்காட்சி நிவர்த்தி [illegible]டுகிறது. பானுவின் கையில், தன்னால் பாழாக்கப்பட்ட சந்திராவை மோகன் ஒப்புவிக்கும் அந்தப் புரட்சிகரமான காட்சியைத்தான் குறிப்பிடுகிறோம் ஆகா—அந்த சமயத்தில் ராதா-ராஜேந்திரன்-ஸ்ரீரஞ்சனி- மூவருமே போட்டி போட்டுக் கொண்டு தங்கள் உணர்ச்சி பாவங்களேக் கொட்டுகிறார்கள். அந்தக் காட்சியைப்பற்றி படம் பார்த்த மக்கள், ஆளுக்கொரு அபிப்பிராயம் கூறுகிறார்கள். வடநாட்டான், திராவிடரின் கையில், தன்னால் பாழாக்கப் பட்ட நாட்டை ஒப்புவிக்கிறான்; அதுதான் இந்தக் காட்சியின் பொருள் என்கிறார்கள். ஆனால், எல்லா அபிப்பிராயங்களுமே படத்தின் வெற்றிக்குத் துணே புரிவதாயிருக்கின்றன. இது இந்தப் படத்திற்கு ஒரு புதுமைதான்!—"நாடகமும் சினிமாவும் நாட்டுக்கு கேடு" என்ற காட்டுக் கூச்சல் கிளம்பியிருக்கும் நேரத்தில் அந்தக் கும்பலுக்கு பதில் சொல்லும் வகையில் திரு. பெருமாள் இதுபோன்ற ஒரு நல்ல படத்தை வெளியிட்டு சினிமா மூலமும் பிரச்சாரம் செய்யலாம் என்ற கொள்கையுடையவர்கள் மத்தியிலே மங்காத புகழ் தேடிக்கொண்டார்.

★ —"ஒலி"



கலேயுலகில் சுயமரியாதைக் கருத்துக்களேச் சொல்லி துணிவோடு தொண்டு புரிந்த முதல் நடிகர்



அதே கருத்துக்களுக்காக கலேயுலகில் புரட்சி செய்து சிறைக்கோட்டம் புகுந்த முதல் நடிகர்

# கடைசிப்பக்கம்



மன்மோகனன் — மதனப்பள்ளி

(?) கோயிலிலே தீபாராதனை காட்டுகிறார்களே 'ஏன்'

எவ்வளவு பேருடைய பாவக் கறை ஏறிய பணம் பொன்னாபரணத்தின் வடிவெடுத்திருக்கிறது என்பதை தூரத்திலிருப்போர் பார்ப்பதற்காக!

★

'நலன்விரும்பி' — நாட்டரசன் கோட்டை

(?) காங்கிரசின் புதிய தலைவர் தீபார் சமுதாய சீர்கேட்டை சாடிப்பேசியிருக்கிறாரே, புதுமை நோக்கம் கொண்டவரோ?

மஞ்சு விரட்டுக்காளை வண்டியில் போட்டவுடன் விரைப்பாகவும் வேகமாகவும் தான் ஓடும்—நாளாக ஆக நாசியிலே பொடியேற்றினாலும் எழுந்திராமல் கொட்டடியிலேயே தூங்குமே!

(?) தென்னாட்டில் சக்தி வாய்ந்த குறுகிய சொல் எது!

அண்ணா!

★

அன்பரசு-ஆரணி.

(?) சென்ற கிழமை சட்டசபை முன் மறியல் செய்தாரே, ஒரு தோழர்; அவர் தி. மு. க, வைச் சேர்ந்தவரா?

இல்லை; இல்லை. இது யாரோ ஒரு அவசரக்காரரின் வேலை தான் என்று சென்னை மாவட்ட செயலாளரும், பொதுச் செயலாளரும் 'நம்நாடு' இதழில் வெளியிட்ட அறிக்கையை நீர் படிக்கவில்லையா?

★

சித்துராசு,—வேம்படிதாளம்.

(?) கம்யூனிஸ்டு கட்சியின் கொடியில் சமீபத்தில் திருத்தம் செய்தது எதைக் காட்டுகிறது?

மாஸ்கோவிற்கும் டெல்லிக்கும் உள்ள தூரத்தை கம்யூனிஸ்டுகள் உணரத் துவங்கி விட்டார்கள்—என்பதைத்தான்!

★

(?) ரஷ்யாவில் இராமயண, மகாபாரதக் கதைகளை வானொலியில் ஒலிபரப்பி வருகிறார்களாமே, இது பற்றி தங்கள் கருத்தென்ன?

புஷ்கினின் கவிதைகளையும், கார்க்கியின் காவியங்களையும் படித்துப் பண்பட்ட ரஷ்ய மக்கள், அந்தக் கதைகளைக் கேட்டு நிச்சயமாக இரக்கத்தைக் காட்டும் 'இச்' சென்ற ஒலி எழுப்புவார்களென்றே நினைக்கிறேன். "இந்த குப்பைகளையெல்லாம் நம்பிக்கிடக்கும் பாரத மக்கள் பரிதாபத்திற்குரியவர்கள்" என்று ரஷ்யா நாட்டு பாலகன்கூட பல்லிளித்துச் சொல்வான்.

★

தண்டபாணி—ராயப்பேட்டை

(?) பட்டம் தாணுப்பிள்ளை ரராஜிநாமா செய்ய வேண்டுமென்று இதுநாள் வரை புயல் போலப் பேசி இப்போது மௌனியாகி விட்ட டாக்டர் லோகியாவைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

தோழர் லோகியோவை புதுமைப் புயல் என்று நினைத்து விட்டீர்? ஐயோ, பாவம்! அவர் சீறிவரும் புயல் அல்ல; வெறும், ஆரவாரம் எழுப்பும் 'ஆட்டோ ரிக்ஷா!'

ஃ ஃ ஃ


## திராவிடர் நாட்குறிப்பு – 1955

இந்த டயரியில், உலக அறிஞர்களின் 365 பொன்மொழிகள், தி. மு. க. முழுவிவரங்கள், சட்டதிட்டங்கள் 850 தி. மு. க. கிளைகளின் விவரம், பேச்சாளர் முகவரிகள் அஞ்சல், பத்திரப் பதிவு கட்டணங்கள் விற்பனை வரி, வருமான வரி விவரங்கள் உள்ளன.

**விலை ரூ. 1.**

விற்பனையாளர் கழிவு 20 சதவிகிதம்-செலவு தனி

பலவித பொங்கல் வாழ்த்துகள் கிடைக்கும்

**போர்வாள் அலுவலகம்** பவழக்காரத் தெரு சென்னை-1


✻

எல்லோரும் எழுதுகிறார்கள்!

எல்லா சிறப்பும் ஒருங்கே பெற்றிருக்கிறது!

பொங்கலன்று — கரும்பைவிட — கற்கண்டுப் பொங்கலைவிட—தேன், திராக்ஷைகளைவிட தித்திக்கப் போகிறது.

## ★ முரசொலி ★
## பொங்கல் மலர்

★ எந்த ஆண்டுப் பொங்கல் விழாவிலும் பெறாத இன்பம் இந்த ஆண்டு பெறப் போகிறீர்கள்!

★ கதைகள்.

★ கட்டுரைகள்.

★ கருத்து நிறைந்த சித்திரங்கள்,

★ கண் கவரும் விதத்திலே—இன எழுச்சிப் பண் பாடும் சிறப்பிலே—திராவிடத்து மண் மீட்கும் விடுதலை விருந்திலே—முரசொலி பொங்கல் மலர் முன்னணியில் நிற்கும்!

★ தலைவர் அண்ணா அவர்களின் அறிவுக் கருவூலத்துடன் ஆரம்பமாகும்.

★ பொங்கல் மலரின் முதல் ஏடு, திரும்பத் திரும்ப தெவிட்டாத தெள்ளமுதாகத் திகழும்.

★ "மணி மகுடம்"—நாடகம், மலருக்குப் பெருஞ் சிறப்பை அள்ளித்தரும் என்பதிலே ஐயமில்லை,

★ பாருங்களேன் — 'அவாள்' ஏடுகளையெல்லாம் புறங்காட்டி ஓடச் செய்து வெற்றி முரசு கொட்டப் போகும் அந்த விழாக் காட்சியை விரைவில் பார்க்கத்தானே போகிறீர்கள்.

**விலை ரூபாய் 2**

இன்றே - உங்களூர் விற்பனையாளரிடம் பதிவு செய்து கொள்ளுங்கள்.

சந்தாதாரர்கள் ரூ 2—4—0 அனுப்பி வைத்தால் மலர் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும்-


★ ★ ★

புதிய நாடகம் தயாராகிறது

ராஜேந்திரன் நாடக மன்றத்தார் நடிக்கும்

# மணிமகுடம்

கதை, வசனம்... கலைஞர் மு. கருணாநிதி



விபரங்களுக்கு. 11. வெங்கடரத்தினம் ரோடு, சென்னை. 18.


மு. கருணாநிதியால் 'முரசொலி' அச்சகத்தில் அச்சிடப்படுகிறது. அலுவலகம்; 4-128. மவுண்ட் ரோடு. சென்னை—6.